22 SEP 1998


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 புரட்டாதி 05 திங்கட்கிழமை (21-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்:254


# உதவி மேயரின் பொறுப்பில் மாநகரசபையின் நிர்வாகம்!

## கூட்டணி பரிசீலிக்கிறது

கொழும்பு, செப்டெம்பர் 21

யாழ். மேயர் பொன். சிவபாலன் கொலையுண்டதை அடுத்து புதிய மேயர் ஒருவரை நியமிக்காமல், உதவி மேயரின் மேற்பார்வையில் மாநகரசபை நிர்வாகத்தை முன்னெடுப்பது தொடர்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆராய்ந்து வருவதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மேயராகப் பதவி வகித்த பொன். சிவபாலன் கடந்த 11 ஆம் திகதி மாநகர சபையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தார்.

அடுத்த மேயராக யாரை தமிழர் விடுதலைக் கூட்டணி நியமிக்கப்போகிறது என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில்—

இயல்பு நிலை திரும்பும் வரை உதவி மேயரின் மேற்பார்வையில் மாநகர சபை நிர்வாகத்தை முன்னெடுக்க கூட்டணி உயர் வட்டாரம் எண்ணியுள்ளதாகவும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நுணாவில் சம்பவம் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

கடந்த வெள்ளிக்கிழமை நுணாவில் மேற்கில் இடம்பெற்றமோதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடலத்தையும் ரி-56 ரக துப்பாக்கிஒன்றையும் அதற்கான மகஸீன்களையும் கைப்பற்றி இருப்பதாகப் பலாலி இராணுவத் தலைமையகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் மறைந்திருந்த படையினர் புலிகளின் நடமாட்டத்தை அவதானித்ததாகவும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு கடலில் மோதல்

கொழும்பு செப் 21

முல்லைத்தீவுக் கடலில் நேற்று முன்தினம் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

திருகோணமலையில் இருந்து வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படைப் படகுகள் ¢முல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இருசடலங்கள், ஆயுதங்கள் கரவெட்டியில் மீட்பு!

### படைத் தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கரவெட்டி வடக்குப் பகுதியில் சூட்டுச் சத்தங்கள் கேட்டதை அடுத்து அப்பகுதியில் நடத்திய தேடுதலில் விடுதலைப் புலிகளின் இரு சடலங்களைக் கைப்பற்றியதாக பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கபபட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கரவெட்டி வடக்குப் பகுதியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி தலதா மாளிகையை பாதுகாக்க தடுப்பு வேலி

### ரூபா 60 லட்சம் செலவில்

கொழும்பு, செப். 21

குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான கண்டி தலதா மாளிகையைப் பாதுகாக்க 60 லட்சம் ரூபா செலவில் தடுப்பு வேலி ஒன்று அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த தலதா மாளிகை பலலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

அதன் பாதுகாப்புக்காக விசேட வேலி ஒன்று அமைக்க தற்சமயம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தலதா மாளிகை புனரமைப்பு நிதியில் இருந்து இந்த வேலி அமைக்கப்படவிருப்பதாகவும்—

வேலி அமைப்பு வேலைகள் நவம்பர் மாதத்தில் பூர்த்தி

(10ஆம் பக்கம் பார்கக)

## கைதானோர், காணாமற்போனோர் குறித்து

# முதலாவது ஆள் கொணர்வு மனு நாளை நீதிமன்றில் தாக்கல் ஆகும்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பாக ஆள்கொணர்வு மனுத்தாக்கல் செய்வது என்று யாழ். மாவட்ட கைதானோர், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் எடுத்த முடிவுக்கு இணங்க—

முதலாவது மனு நாளை யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

மேற்படி சங்கத்தின் தலைவர் பரமநாதன் செல்வராசாவே முதலாவது மனுவைத் தாக்கல் செய்யவிருக்கிறார்.

1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி செம்மணிச் சந்தியில் வைத்துக் கைது செய்யப்பட்ட தனது மகன் பிரபாகரன் (23 வயது) பற்றிய தகவல் வேண்டி இந்த மனுவை அவர் தாக்கல் செய்யவிருக்கின்றார்.

இதைத் தொடர்ந்து காணாமல் போனவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் ஆள் கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்யவிருக்கின்றனர்.

(இ-3-1)

## ஜனாதிபதிக்கு

# விமான நிலையத்தில் கடும் பாதுகாப்பு

கொழும்பு, செப். 21

ஐ. நா. கூட்டத்தொடரில் பங்குபற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வெள்ளியன்று அமெரிக்கா பயணமான போது சுமார் 700 பொலீஸார்கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பயங்கரவாத செயற்பாடுகள் இடம்பெறக் கூடும்எனக் கிடைத்த தகவலையடுத்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விமான நிலையத்துக்குச்

(10 ஆம் பக்கம்பார்க்க)

## தாக்குதல்

குஞ்சுக்குளத்துக்கு வடமேற்கே நிலைகொண்டிருந்த படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

## இந்தியக் கப்பலை மீட்க வெளிநாட்டு ஆலோசனை

கொழும்பு, செப். 21

கொழும்பு துறைமுகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் மூழ்கிய இந்தியக் கப்பலை மீட்க வெளிநாட்டு ஆலோசனை பெறப்படவிருப்பதாக துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே தரித்து நின்ற இந்தியக் கப்பல் ஒன்றுடன் ஐரோப்பிய நாட்டுக் கப்பல் மோதியதால் இந்தியக் கப்பல் மூழ்கியது.

இந்தியக் கப்பலை மீட்கும முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்—

சிங்கப்பூர் உட்பட மற்றும் பல நாடுகளிடம் இதற்கான ஆலோசனைகள் பெறப்படவிருப்பதாகவும்— அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை— இந்தக்கப்பல் விபத்துக் காரணமாக துறைமுக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாகவும்—

அதற்கான நட்டத்தை இரு கப்பல் நிறுவனங்களே வழங்க வேண்டும் என்றும்— அந்த அதிகாரி கூறினார்.

(இ-3-9)

# மனித உரிமை மீறல் குறித்து ஆராய மன்னிப்புச் சபைப் பிரதிநிதி வருகை

கொழும்பு, செப். 21

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக நேரில் ஆராய சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை விவகாரங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் செல்வி இங்கிரிட் மசாகி கொழும்பு வந்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், செம்மணி விவகாரம், வடக்கு-கிழக்கில் வதை முகாம்கள் ஆகியவை தொடர்பாக அண்மைக்காலமாகப் பல அறிக்கைகளை வெளியிட்டு வரும் லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் உயர் அதிகாரி நீண்ட காலத்தின் பின் கொழும்பு வந்துள்ளார்.

இலங்கையில் இரு வாரங்கள் தங்கி நிற்கும் இவர் மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகளையும், அரச, எதிர்க்கட்சித்தலைவர்களையும் சந்தித்து இங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## உயிலங்குளத்தில் கடும் சோதனை

### 8 பேர் கைதாகினர்

வவுனியா, செப். 21

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து உயிலங்குளம் ஊடாக நேற்று முன்தினம் வந்த ஆயிரத்து 500 பேர் பூவரசங்குளம் தடை முகாமில் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அங்கு தலையாட்டி முன் நிறுத்தப்பட்ட அவர்களில் எட்டுப் பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

உயிலங்குளம் ஊடாக வந்து வவுனியா செல்வதற்காக வரும் பயணிகள் தினமும் இந்தந் தடைமுகாமில் பல இன்னல்களை எதிர்நோக்குவதாகவும் —

இரவு நேரங்களில் பெண்கள் சேட்டைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் — பயணிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

(இ-3-64)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் கணேசலிங்கம்

(பாப்பா, R. R. F. A. O.)

மாவை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது சந்தனமாதா கோயில் ஒழுங்கை, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்டவரான ஆறுமுகம் கணேசலிங்கம் 19-09-98 இல் காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், உமையாள் (சுண்டுக்குளி, மகளிர் கல்லூரி), உமாசங்கர் (பம்பலப்பிட்டி, இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம் மங்கையர்க்கரசியின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளையன் அன்பு மருமகனும், திருமதி நடராசா, திரு. ஞானசேகரம், திருமதி ஸ்வரச்சந்திரன், திருமதி துரையப்பா, திரு. சண்முகலிங்கம், திரு. ஸ்ரீனிவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. பூலோகசேகரம், திருமதி சின்னத்துரை, திருமதி பாலகிருஷ்ணன், திருமதி ரங்கநாதன், திரு. நடேசன், செல்வி புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

க. யோகேஸ்வரி (மனைவி)

உமையாள், உமாசங்கர் (பிள்ளைகள்)

54/5, சந்தனமாதா கோயில் முன்ஒழுங்கை,
பாண்டியன் தாழ்வு,
சுண்டுக்குளி.

(59332)

---

திருமதி

## நடராஜா அழகம்மா

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா - அழகம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இ. நடராஜாவின் அன்பு மனைவியும் ந. வேலாயுதபிள்ளை (சுன். ப. நோ. கூ. ச), செல்வராணி (சுவிஸ்), ஸ்ரீமதி, சிவதேவி, ரஞ்சிதமலர், ஸ்ரீகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமேஸ்வரி, சிவராசா (சுவிஸ்), சண்முகராசா (வவுனியா), ரவிச்சந்திரன், விக்கினராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், முகுந்தன், முகுந்தருபினி, பென்சிலா (சுவிஸ்), சேந்தன், சயந்தன், சயந்தினி, சிந்துஜன், நிரோசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-9-98) திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ந. வேலாயுதபிள்ளை (மகன்)

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(59336)

---

திருமதி

## அமிர்தம் சங்கரப்பிள்ளை

(அன்னக்கா)

வடலியடைப்பைச் சேர்ந்த திருமதி அமிர்தம் சங்கரப்பிள்ளை 19-09-1998 சனிக்கிழமை கோண்டாவில் மேற்கில் காலமானார்.

அன்னார் வடலியடைப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தி. விஸ்வலிங்கத்தின் அன்பு மகளும், திருமதி கண்ணாம்பிகை தேவராஜா, காலஞ்சென்ற திருமதி தனலட்சுமி குமாரசாமி (ஆசிரியை), திருமதி இராசபூபதி மயில்வாகனம், திருமதி நற்குணேஸ்வரி தெய்வேந்திரன் (கனடா), ச. குணராஜா (கனடா), திருமதி ரூபி சிவதாசன், ச. ரவீந்திரராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தேவராஜா (கோண்டாவில் மேற்கு), குமாரசாமி (கோண்டாவில் கிழக்கு), காலஞ்சென்ற மயில்வாகனம், தெய்வேந்திரன் (கனடா), சி. சிவதாசன் (சங்குவேலி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், த. அருமைநாயகத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும், வடலியடைப்பு - மாகியப்பிட்டி ச. கிருஷ்ணமூர்த்தியின் பாசமிகு பெரியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-09-98) திங்கட்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் காலஞ்சென்ற சிறிய தகப்பனார் தம்பிராசாவின் கோண்டாவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க. சங்கரப்பிள்ளை (கணவர்)

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

(வடலியடைப்பு)

தற்போதைய முகவரி:
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(59335)

---

# வடக்கு-கிழக்கு சுயாட்சி அலகை நிறுவ அரசு, எதிர்க்கட்சி ஒத்துழைப்பு தேவை

## வலி. மேற்கு பிரதேச சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 21

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்ப்பதற்காக வடக்கு—கிழக்கு சுயாதிக்க சுயாட்சி அலகை நிறுவுவதற்கு அரசும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானத்தை வலி. மேற்கு பிரதேச சபை நிறைவேற்றியுள்ளது. இத் தீர்மானததை அதன் தலைவர் ந. திரிலோகநாதன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அத் தீர்மானத்தில்—

வெளிநாட்டு அரசு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண நிலைமை முழுமையாகச் சீரடைந்து தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் புத்துணர்வு பெற்று ஒளிமயமாக இருப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## போராட்டம் நடத்த அன்னையர் முன்னணி புதிதாக அமைப்பு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி காணாமற்போனோரின் நிலை குறித்து போராட்டம் நடத்த புதிய அன்னையர் முன்னணி ஒன்று நேற்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் நேற்று நடத்திய கூட்டத்திலேயே இந்த முன்னணி உருவாக்கப்பட்டது.

இந்த முன்னணியின் தலைவராக திருமதி செல்வராசா கனகாம்பிகையும், செயலாளராக திருமதி வேலுச்சாமி கௌரியும் தெரிவு செய்யப்பட்டனர்.

காணாமற்போனோர் தொடர்பாக ஆள்கொணர்வு மனுத்தாக்கல் செய்ய தேவையான நிதியை சங்க அங்கத்தவர்களிடம் இருந்து பெறுவது என்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(இ-36)

## சமய சந்நிதியில்

உரும்பிராய், செப். 21

உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தில் நவராத்திரியை முன்னிட்டு இன்று முதல் தினமும் பிற்பகல் 3-30 மணிக்கு அபிசேகமும், 4-00 மணிக்குப் பூசையும் இடம்பெறவுள்ளது.

(ஐ-154)

★ ★ ★

குருநகர், செப். 21

சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. நாளை மறுதினம் புதன்கிழமை நற்கருணை விழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். இத்திருப்பலி யாழ். ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த யாத்திரைத் தலத்துக்கு திருவிழா நாட்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்ல யாழ். பஸ் நிலையத்தில் போக்குவரத்து செய்யப்பட்டுள்ளதுடன் ஆலய வளவில் தங்கிநிற்க அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் ஆலய பரிபாலகர் அருட்திரு. ஜே. ஜே. மவுலிஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

(ஐ-51)

## வீடமைப்புக் கடன்

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் வீட்டு வசதி குறைந்தோருக்கு வீடமைப்புக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

பருத்தித்துறை நகரசபையின் சிபார்சுடன் முதற்கட்டமாக 35 பேருக்குத் தேசிய வீடமைப்பு அதிகார சபை இக்கடன்களை வழங்கவுள்ளது.

(ஐ-173)

---

யாழ். மாவட்ட

## புகைப் படப் பிடிப்பாளர் சங்க விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

யாழ். மாவட்ட புகைப்படப் பிடிப்பாளர் சங்கத்தை யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளரின் கீழ் பதிவு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட யாப்பை அங்கீகரிப்பதற்கான விசேட பொதுக்கூட்டம் நாளை (22-09-98) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு (புதிய நேரம்) நல்லை ஆதினத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

செயலாளர்.

குறிப்பு: இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கும் அங்கத்தவர்கள் மட்டுமே இவ்வருடத்திற்கான வாக்குரிமை பெற்ற அங்கத்தவர்களாகக் கருதப்படுவர்.

(59338)

---


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று முதல்
சாய்குமார்
சவுந்தர்யா
நடித்த
ஈஸ்வர அல்லா
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228

(59242)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
15 - 09 - 98 முதல்
எம் ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
( ரீல்ஸ் )
காட்சி: 10-30, 2-30

(59334)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

சத்தியராஜ்
(இரு வேடம்)
கஸ்தூரி, சுஜாதா
நடித்த
அமைதிப்படை
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4926)


---

# மரண அறிவித்தல்

திருமதி

## சரஸ்வதி வைகுந்தசாமி

இல: 14, திருமகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி வைகுந்தசாமி அவர்கள் 19.09.98 சனிக்கிழமை இரவு காலமானார்.

இவர் சீ. வைகுந்தசாமி (ஓய்வுபெற்ற அதிபர், நல்லூர் ஸ்தான சி. சி. த. க பாடசாலை) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற கதிர்காமு - பவளம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சீனிமுத்து - செல்லமுத்து தம்பதிகளின் மருமகளும், காந்தமலர், செல்வமலர், யோகநாதன் (அ. ப. தெ. அ. கூ. சங்கம்), ரஞ்சன் (கனடா) ஆகியோரின் சகோதரியும், சின்னத்துரை (இ. போ. ச முன்னாள் ஊழியர்) அருமைலிங்கம் (அ. ப. தெ. அ. கூ. ச), திருமதி பராசக்தி ஆகியோரின் மைத்துனியும், மனோகரன் (டென்மார்க்) முரளிதரன், உமா, அனுரா, அசோக், ஜெனு, ஜயந்தி, டெனிஸ்ரா ஆகியோரின் பெரிய தாயாரும், பிரசாத், பிரதீப், நிசாந்தன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.09.98 இன்று திங்கட்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சீ. வைகுந்தசாமி
[ஓய்வுபெற்ற அதிபர்]

14, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

[59322]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பீன்ஸ் நாட்டுக் கப்பல்

# 443 பேருடன் மூழ்கியது!

## 20 சடலங்கள் மீட்பு

443 பயணிகளை ஏற்றிச் சென்ற பிலிப்பீன்ஸ் இழுவைப்படகு ஒன்று கடும் புயலில் சிக்கிக் கவிழ்ந்ததில் நூற்றுக் கணக்கானோர் காணாமற் போயினர்.

வெள்ளிக் கிழமை இரவு மணிலாவில் இருந்து மத்திய நகரமான சீபுவுக்குப் புறப்பட்ட இப்படகு கடும் கடற்புயலில் சிக்கி 12 மணி நேரமாக கடலில் அடித்துச் செல்லப்பட்டு பின் மூழ்கியது.

ஹெலிக் கொப்ரர்களும், மீன்பிடிப் படகுகளும் உடனடியாக பயணிகளை மீட்பதில் ஈடுபட்டன. நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர். நூற்றுக் கணக்கானோர் காணாமற் போயுள்ளனர். நேற்று நண்பகல் கிடைத்த தகவல்களின்படி 20 சடலங்கள் நீரில் இருந்து மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்டோரில் பலர் படகில் இருந்து வெளியேறிய கறுப்பு ஒயிலில் தோய்ந்து காணப்பட்டனர். காலநிலை அறிக்கைகளின் படி 'விக்கி' (Vicki) எனப்படும் ஒருவகை கடற்புயல் அன்றிரவு மணித்தியாலத்துக்கு 75 கிலோ மீற்றர் வேகத்தில் வீசியுள்ளது.

13 ஆயிரம் தொன் எடையுடைய 'பிறின்ஸஸ் ஒவ் ஒறியன்ற்' (Princess of the Orient) என்ற இழுவைப் படகே புயலில் சிக்கி மூழ்கியது.

இந்தப் புயலினால் மணிலாவின் பல பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

7 ஆயிரம் சிறிய தீவுக் கூட்டங்களைக் கொண்ட பிலிப்பீன்ஸில் பிரதான கடற்போக்குவரத்து சாதனமாக இழுவைப் படகுகளே விளங்குகின்றன.

1987 ஆம் ஆண்டு பிலிப்பீன்ஸில் 'டொனா பாஸ்' என்ற இழுவைப்படகு டாங்கர் ஒன்றுடன் மோதி மூழ்கியதில் 4 ஆயிரத்து 341 பேர் மாண்டது நினைவிருக்கலாம். (ஐ)

## கிளின்ரன் மீது மற்றொரு குற்றச்சாட்டு

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் 12 வயது மாணவப்பருவத்திலிருந்து சுமார் 30 ஆண்டு காலமாக அவரோடு அவ்வப்போது உடல் உறவு வைத்துக் கொண்டிருந்ததாக ஹாலிஹை புறவ்னி என்னும் பெண் கூறியுள்ளார்.

## பிரெஞ்சுப் புரட்சியும் எல் - நினோவும்...!

லண்டன், செப்: 21

'எல்-நினோ' எனப்படும் அசாதாரண காலநிலையின் தாக்கமே பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டதா?

உலக காலநிலை நிகழ்வுகளின் வரலாற்றைத் தொகுத்து வெளியிடும் 'கின்னஸ்' புத்தகம் ஒன்றில் இத்தகவல் வெளியாகி உள்ளது.

இந்த ஆண்டிலும் கடந்த ஆண்டின் இறுதியிலும் உலகில் பல்வேறு காலநிலை அனர்த்தங்களுக்கு 'எல் - நினோ, காரணமாய் அமைந்தது.

இந்த நூற்றாண்டில் 30 தடவைகள் தோன்றிய 'எல் – நினோ' ஐரோப்பாவில் 'கறுப்பு மரணங்கள்' எனப்படும் லட்சக்கணக்கான உயிர்களைக் காவு கொண்ட தொற்றுநோய்க்கு காரணமாக அமைந்தது என லண்டனில் கின்னஸ் நூல் வெளியீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'எல் - நினோவால்' ஏற்பட்ட வரட்சி, பட்டினி காரணமாகவே இந்நோய் பரவியது. இந்த வாட்சியே 1780 ஆம் ஆண்டு காலப்பகுதியின் இறுதியில் பிரான்ஸில் பயிர் அழிவு. விளைச்சல் அழிவு என்பனவற்றை ஏற்படுத்தியது. அதன் விளைவாய் புரட்சி ஏற்பட்டது. பிரஞ்சுப் புரட்சி முடிவுக்குவந்து ஓராண்டின் பின்னரே 'எல் – நினோ' தணிந்தது என்றும் கின்னஸ் வெளியீட்டாளர்கள் கூறியுள்ளனர். (ஐ)

## தஸ்லிமா நஸ்றீன் நாடு திரும்பினாரா?

பங்களாதேஷின் சர்ச்சைக்குரிய பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்றீன் தனது தலைமறைவு வாழ்வை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பி விட்டாரா?

பங்களாதேஷில் இந்த செய்தி பரவியதை அடுத்து அவரைத் தேடிப் பிடிக்க பொலீஸாரும், புகைப்படம் பிடிக்க பத்திரிகைப்படப் பிடிப்பாளர்களும் வலை விரித்துள்ளனர்.

ஆனால் நஸ்றீன் நாடு திரும்பிய தகவலை அவரது உறவினர்கள் உறுதி செய்யவில்லை.

'லஜ்ஜா' (வெட்கம்) என்ற தனது நூல் மூலம் இஸ்லாமியக் கோட்பாடுகளை அவதூறு செய்ததற்காக நஸ்றீன் தண்டிக்கப்பட வேண்டும் என்று இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கோரி வருகின்றனர்.

1994 இல் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதை அடுத்து நஸ்றீன் சுவீடனுக்கு தப்பிச் சென்று தலைமறைவானார்.

இஸ்லாத்தை அவமதித்தமைக்காக அவர் வேட்டையாடப்பட வேண்டும் என்று பங்களாதேஷ் நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டதை அடுத்தே அவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார். (ஐ)

## சமாதானத் தூதராக மொஹமட் அலி

நியூயோர்க்: செப். 21

மூன்று தடவை உலக அதிபாரக் குத்துச்சண்டை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட மொஹமட் அலியை 'சமாதானத் தூதராக' ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் பிரகடனம் செய்துள்ளார். ஐ. நா. சமாதான தினத்தை முன்னிட்டு அவர் இந்தப்பிரகடனத்தைச் செய்துள்ளார்.

குத்துச் சண்டையில் இருந்து ஓய்வுபெற்றுள்ள அலி தற்போது 'பார்க்கின்ஸன்' என்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். ஆனாலும் அவர் ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்து தனது நிதியில் இருந்து லட்சக்கணக்கான டொலர்களை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வருகிறார். (ஐ)

## நீரிழிவு நோயாளர் எண்ணிக்கை உலகில் 2 மடங்காக அதிகரிக்கும்

### இந்தியா முன்னணியில்

ஜெனீவா, செப். 21

உலகில் உள்ள நீரிழிவு (சலரோகம்) நோயாளர்களின் எண்ணிக்கை அடுத்த 25 ஆண்டுகளில் இரு மடங்காக அதிகரிக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) எச்சரித்துள்ளது.

தற்போது 15 கோடியாக உள்ள இந்த எண்ணிக்கை 30 கோடியாக உயரும் என்றும்—

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலேயே பாதிப்பு அதிகமாக இருக்கும் என்றும்—

உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே நீரிழிவு நோயாளர் நிறைந்த நாடு என்ற இடத்தை இந்தியா பிடிக்கும். 2 ஆயிரத்து 25 ஆம் ஆண்டு இந்தியாவில் 5கோடி 70 லட்சம் பேர் நீரிழிவு நோயாளிகளாக இருப்பர். சீனாவில் இந்த எண்ணிக்கை 3 கோடி 80 லட்சமாகவும், அமெரிக்காவில் 2 கோடி 20 லட்சமாகவும் இருக்கும் என்று உலக சுகாதாரநிறுவனத்தின் அறிக்கையை மேற்கோள்காட்டி பீ. ரீ. ஐ. செய்தி தெரிவித்துள்ளது. [ஐ]

## பின்லாடனின் ஆயுத தரகர் ஜேர்மனியில் கைதானார்?

மியூனிச், செப்: 21

சர்ச்சைக்குரிய சவுதி கோடீஸ்வரர் ஒஸாமா பின்லாடனின் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என நம்பும் நபர் ஒருவரை ஜேர்மன் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

வாஷிங்டனில் உள்ள சர்வதேச பொலீஸ் அதிகாரிகளிடம் இருந்து கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் கடந்த புதனன்று இந்த நபர் கைது செய்யப்பட்டதாக நீதி அமைச்சு விடுத்த அறிக்கை தெரிவித்தது.

இந்த நபரின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவில்லை. மஹ்மூட் மஹ்மூட் சலீம் என்பவரே கைது செய்யப்பட்டதாகவும்-

பின்லாடனின் ஆயுத தரகரான இவர் ஒரு லெப்டினன்ட் என்றும்-

'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தெரிவித்தது. (ஐ)

## ஈரான்- அமெரிக்க அதிகாரிகள் இன்று நியூயோர்க்கில் பேச்சு!

ஈரானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் மோதல் இடம் பெறுவதைத் தவிர்க்கும் முகமாக அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையில் நியூயோர்க்கில் இன்று திங்கட்கிழமை பேச்சு வார்த்தைகள் நடைபெற உள்ளதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடர் நடைபெறும் போது அமைச்சர்கள் மட்டத்தில் இப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறும்.

இந்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளி விவகார அமைச்சர் மெடலின் அல்பிரைட் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் கமால் கராஷி, ஆப்கானுக்கான ஐ. நா. தூதுவர் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இவர்களுடன் ஆப்கானிஸ்தானின் அயல் நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள் என இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

1979 ஆம் ஆண்டில் அமெரிக்கத் தூதரகப் பணயக் கைதிகளை விடுவிப்பதற்காக நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் பின்னர் [illegible] இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

ஆப்கான் எல்லைப் பகுதியில் ஈரான் மேலும் படையினரைக் குவித்து வருகின்றது.

பீரங்கிப் படைகள் உட்பட 9 இராணுவப் பிரிவுகளை ஈரான் எல்லைப் பகுதிகளுக்கு உடனடியாக அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-6)


## இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

சுன்னாகம்.

இக் கல்லூரியில்
இளம் இறையியல் ( B. Th )
இறையியல் டிப்ளோமா சான்றிதழ்
( Dip. in - Theo. )
நற்செய்திப் பணியியல் பயிற்சி

ஆகியவற்றில் சேர்ந்து பயிற்சி பெற விரும்புபவர்கள் G.C.E O/L அல்லது A/L பரீட்சைகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

உங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் ( 31–10–98 ) அனுப்பி வைக்கவும்.

அதிபர்
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
சுன்னாகம்.

( C/4927 )



## தொண்டர் ஆசிரியர்களின் கவனத்திற்கு

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய, கடமையாற்றும் அனைத்து ஆசிரியர்களின் சேவைக்காலம் கல்வித்தகமை, சுய விவரம் என்பன உடன் தேவைப்படுவதால் அவற்றினை உடன் வழங்கும் வகையில் பின்வரும் கால ஒழுங்குக்கு ஏற்ப அழைக்கப்படுகின்றனர்.

31-12-92 ஆம் ஆண்டுக்கு முன்னர் சேவையில் உள்ளோர் 23-09-98 புதன்கிழமை காலை 9 மணி.

31-12 95 ஆம் ஆண்டுக்கு முன்னர் சேவையில் உள்ளோர் 24-09-98 வியாழன் காலை 9 மணி.

31-12-98 ஆம் ஆண்டுக்கு முன்னர் சேவையில் உள்ளோர் 25-09-98 வெள்ளி காலை 9 மணி.

இடம்: D. M. I. கல்வி நிலையம்
ஆரியகுளம் சந்தி.

குறிப்பு:
குறிப்பிட்ட திகதிகளில் பதிவுகளை நேரில் செய்து கொள்ளவும்.

தொண்டர் ஆசிரியர் சங்கம்
யாழ். மாவட்டம்

(59333)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு - கிழக்கில் 46 இடங்களில் உள்ள

# சட்டவிரோத வதை முகாம்கள் மீது படையினர் விரைவில் நடவடிக்கை!

## இராணுவ தளபதி தெரிவிப்பு

கொழும்பு, செப். 21

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் உள்ள சட்டரீதியற்ற வதை முகாம்கள் அனைத்தும் சுற்றிவளைக்கப்படுவதுடன் அதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் கைது செய்யப்படுவார்கள் என இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் றொஹான் தளுவத்த தெரிவித்துள்ளார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் சட்ட ரீதியற்ற வதை முகாம்கள் இருப்பதாகவும், அதனை மூடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை அரசைக் கேட்டிருந்ததை அடுத்தே இராணுவத்தளபதி இந்த அறிவிப்பை விடுத்துள்ளார் என அந்தச் செய்தி தெரிவிக்கின்றது.

வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறான 46 சட்ட விரோத வதை முகாம்கள் இருப்பதாகவும்—

அவற்றில் சுமார் 150 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் எனவும்—

இவ்வாறான முகாம்கள் பற்றித் தகவல் அறிந்தவர்கள் எழுத்து மூலமோ, வாய்மொழி மூலமோ தமக்கு தகவல்களைத் தரமுடியும் எனவும் — இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார் என அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது. (ஐ-9-10)

# குப்பைகொளுத்திய போது ரவைகள் வெடித்தன

## இத்தாவிலில் பதற்றம்

தென்மராட்சி, செ. 21

வீதியில்குவிக்கப் பட்டிருந்த குப்பையை எரித்த போது அதனுள் கிடந்த துப்பாக்கி ரவைகள் படபட வென வெடித்ததால் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது. இச்சம்பவம் கடந்த வெள்ளியன்று பகல் 11.00 மணிக்கு பளை இத்தாவிலில் இடம் பெற்றது.

துப்பாக்கி ரவைகள் வெடித்த சத்தம் கேட்டதும் கண்டி வீதியில் சைக்கிளில் வந்த சிலர் விழுந்து படுத்தனர்; சிலர் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு ஓட்டம் பிடித்தனர்; இத்தாவில்சந்தியில் நின்றவர்கள் பதற்றமடைந்த போதிலும் சம்பவத்தையறிந்த பின்வழமைக்குத் திரும்பினர். (ஐ-117)

# உள்ளூர் செருப்புகள் சந்தைக்கு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவினால் வதிரியில் நடத்தப்படும் தோற்பொருள் உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்பட்ட செருப்புகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

வதிரியில் உற்பத்தி செய்யப்பட்ட செருப்புகளின் விற்பனை அண்மையில் யாழ். நகரில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக சங்கப் பிரதிநிதி தெரிவித்தார். (ஐ-117)

# இன்று ஆரம்பம்

அம்பன அமெரிக்க மிஷன் பாடசாலையில் இன்று திங்கட்கிழமை முதல் மாலை நேர கல்வியகம் ஆரம்பிக்கப்பட உள்ளது,

மருதங்கேணி கல்விக் கோட்டத்தினரால் அண்மையில் உருவாக்கப்பட்ட கல்வி அபிவிருத்திச் சபையினால் இந்த மாலைநேர கல்வியகம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி, தமிழ் ஆகிய பாடங்கள் இங்கு இலவசமாகப் போதிக்கப்படும். (ஐ-36)

### கொழும்பில்

# பயங்கரவாத எதிர்ப்பு கவுன்சிலின் கூட்டம்

கொழும்பு, செப். 21

பயங்கரவாத எதிர்ப்பு தேசிய கவுன்சிலின் கூட்டம் எதிர்வரும் திங்களன்று கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் மண்டபத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை மாங்குளத்தில் கைவிடும் அரசியலவாதிகளின் முயற்சிகளுக்கு இடமளிக்கமாட்டோம்; வெளிநாட்டு மத்தியஸ்தத்திற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்; தமிழ் இனவாத புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தி அதன் மூலம் தேசிய இனத்தை தாரைவார்த்துக் கொடுக்க இடமளிக்க மாட்டோம்; துரோகிகளான அரசியல் கட்சிகளைக் கைவிட்டு எமது பிள்ளைகளின் உயிர்களுக்காகக் கொலைகாரப் புலிகளைத் தோற்கடிப்பது என திடசங்கற்பம் எடுப்போம் ஆகிய சுலோகங்களைத் தாங்கி அன்றைய தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனத் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

# குறியீடுகள் எழுதப்பட்டு மைல் கற்கள் புனரமைப்பு

உரும்பிராய், செப். 21

குடாநாட்டில் பிரதான வீதிகள் சந்திக்கும் பல இடங்களில் அவ் வீதிகளூடாகச் செல்லும் இடங்களைச் சுட்டிக் காட்டும் குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதற்கென பிரதான சநதிகளில் அதன் நாற்புறத்திலும் சிறிய சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து நெடுஞ்சாலைத் திணைக்கம் இவற்றை அமைத்துள்ளது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற அனர்த்தங்கள் காரணமாக சந்திகளில் முன்பு இருந்த இவ்வகையான மைல் கல் குறியீடுகள் அழிந்து போயின.

முன்னைய குறியீடுகளில் இடங்களின் தூரம் குறிக்கப்பட்டிருந்தது. இப்போது அவற்றில் தூரங்கள் குறிப்பிடப்படவில்லை. (ஐ-154)

# உணவை ஓர் ஆயுதமாக பயன்படுத்த முனையக்கூடாது

## ஜனாதிபதிக்கு டக்ளஸ் கடிதம்

கொழும்பு செப். 21

"வன்னியில் வாழும் யாழ் குடாநாட்டு மக்களை தமது சொந்தப் பகுதிகளுக்குதிரும்பவைக்க அரசு உண்மையாக அக்கறைப்படுமானால், அரசியல் ரீதியாகவும், சீரான சிவில்நிர்வாகம் மற்றும் புனரமைப்புப்பணிகள் மூலமும் நம்பிக்கை ஊட்ட வேண்டுமே தவிர, உணவை ஓர் ஆயுதமாகப் பாவிக்க முனையக் கூடாது."

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி அமைப்பின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மற்றும உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள், வெளி நாட்டுத் தூதரகங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் அரச படையினரின் கட்டுப்பாடற்ற பகுதிகளில் பட்டினிச்சாவு அபாயம் தோன்றியுள்ளது.

மேற்படி மாவட்டங்களில் நிவாரண வெட்டை அமுல்படுத்துவது தொடர்பாக அத்தியாவசிய திணைக்களம் சம்பந்தப்பட்ட அரச அதிபர்களுக்கு கடந்த ஜூன்மாதம் அனுப்பிவைத்த பணிப்புரை தெளிவற்றதாகவும், பொறுப்பற்ற ஒன்றாகவும் அமைந்துள்ளது.

நிவாரண வெட்டை எப்படி மேற்கொள்வது என்ற வழிகாட்டல் வழங்கப்படாததால் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் கடந்த ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படவில்லை.

இதே வேளை ஜூன், ஜூலை, மாத நிவாரணம் வழங்கப்படாமையினால் ஓகஸ்ட் மாத நிவாரணம் வழங்கப்படமாட்டாது என அத்தியாவசிய திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் இடம்பெயர்ந்த மக்கள் மட்டுமன்றி பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இந்த விடயம் குறித்த மனிதாபிமான பிரச்சினையில் இனியும் தேவையற்ற காலதாமதம் செய்யாமல் நிவாரண வெட்டை நிறுத்துமாறு கோருகின்றேன்

இவ்வாறு அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

### பெரும்போக காலத்தில்

# கட்டாக்காலிகள் மீது கடும் நடவடிக்கை

வலி. தென்மேற்கு, செப். 21

பெரும்போக நெற்செய்கைக் காலத்தில் கட்டாக் காலியாகத்திரியும் கால்நடைகள் மீது இவ்வருடம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதியில் இருந்து இந்த அமுல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு அவ்வப் பகுதி விவசாய சம்மேளனங்களின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (ஐ-185)

# யுத்தத்தினால் நலிவுற்றோருக்கு இயன்றதைச் செய்ய முயல்வோம்

## பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர்

வடமராட்சி, செப். 21

யுத்தத்தினால் நலிந்து போயுள்ள மக்களுக்கு புத்துயிர் அளிக்க இச்சபை மூலம் என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அந்நடவடிக்கைகள் அனைத்தையும் நாம் மேற்கொள்வோம்.

பருத்தித்துறை பிரதேச சபையின் முதலாவது கூட்டத்தில் பேசிய சபையின் தலைவர் திரு. ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

புலோலியில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஈ. பி. டி. பி. சார்பில் தெரிவான தலைவர் உட்பட 5 உறுப்பினர்களும், ஈ. பி. ஆர். எல். எவ். சார்யில்தெரிவானஇருஉறுப்பினர்களும், ரெலோ சார்பில் தெரிவான ஒரே ஒரு உறுப்பினருமாக மொத்தம் 8பேர் கலந்து கொண்டனர்.

புளொட் சார்பில் தெரிவான ஒரு உறுப்பினரும் இக்கூட்டத்தில் சமுகமளிக்கவில்லை. இச்சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் 9 பேராவர்.

இக்கூட்டத்தில் சபைத் தலைவர் ஐயாத்துரை ரங்கேஸ்வரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பல ஆண்டு இடைவெளியின் பின், ஓர் அரசியல் தலைமைத்துவத்தின்கீழ் இச்சபை இயங்க ஆரம்பிக்கிறது. இச்சபை மூலம் அளப்பரிய சேவைகள் தமக்குக் கிடைக்கும் என எண்ணி மக்கள் எமக்கு ஆதரவு அளித்துள்ளார்கள். ஆனால் பிரதேச சபை மூலம் இன்று நடைபெறும் யுத்தத்தையோ தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளையோ தீர்த்து விடமுடியாது. இருந்தும் கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் துன்ப துயரங்களைச் சுமந்து பல இழப்புக்களைச் சந்தித்திருக்கும் மக்களுக்கு அவர்கள் புத்துயிர்பெற நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கு இப்பிரதேச சபை என்ன பணிகளைச் செய்யமுடியுமோ அவை அனைத்துக்கும் எம்மை அர்ப்பணித்துச் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

சேவைக்காக பதவிகளே அல்லாமல் கதிரைக்காக என்று இருந்துவிடாமல் சபை உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதமின்றி பரந்த மனதுடன் சேவையாற்ற வேண்டும். ஊழியர்களுக்கிடையே சமூக உறவும், நல்லெண்ணமும் பேணப்பட வேண்டும்—என்று அவர் கூறினார். (ஐ-173)

அத்தியடி

ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

நவராத்திரி விழாவும் தெய்வீகச் சொற்பொழிவும்

புரட்டாதித் திங்கள் 5 ஆம் திகதி (21 - 9 - 98) திங்கட்கிழமை தொடக்கம் 15 ஆம் திகதி வரை (01 - 10 - 98) வியாழக்கிழமை வரை தினமும் பிற்பகல் 4-00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும். தினமும் பிற்பகல் 5-30 மணிக்கு

புராண இதிகாச முத்துக்கள்

என்னும் தலைப்பில்

காரை பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா அவர்கள் தெய்வீகச் சொற்பொழிவாற்றுவார்.

- கோயில் நிர்வாகம்

(59326)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75 இராணுவ அதிகாரிகள் மீது ஊழல், மோசடி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 21

ஊழல். மோசடி போன்ற சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 75 இராணுவ உயர் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று மேஜர் ஜெனரல்கள் —

12 பிரிகேடியர்கள்—

29 கேணலகள் —

லெப்டினன்ற் கேணல், மேஜர் உட்பட 31 பேர் ஆகியோர் மீதே ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவச் சேவைக்கே களங்கம விளைவிக்கும் வகையில் இவர்கள் செயற்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் றொகான் தழுவத்த விடுத்த விசேட உத்தரவின் பேரிலேயே இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(இ-3-10)

# கோவில் குளம் சம்பவம் குறித்துபுளொட்கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 21

அரசியல் கருத்து முரண்பாடுகளைக் கருவிகள் மூலம் தீர்க்க முயல்வது ஜனநாயக உரிமைகளை மீறும் செயலாகும். இவ்வாறான பாசிச படுகொலைகள் மூலம் எமது மக்களின் உரிமைகளையோ தாயகத்தையோ மீட்டுவிட முடியாது.

கடந்த வெள்ளி இரவு வவுனியா கோவில் குளம் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் உறுப்பினர் மற்றும் ஒரு பொதுமகன் ஆகியோரது மரணம்தொடர்பாகப் புளொட் அமைப்பின் யாழ். மாவட்டச் செயலகம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி இரவு 8மணியளவில் கோவில்குளம் பகுதியில் வைத்து புளொட் உறுப்பினரான பூபாலசிங்கம் யோகநாதன் (வயது 32), பொது மகனான ஜெகநாதன் ஜெயக்குமார் (வயது 24), ஆகிய இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாகவே மேற்படி கண்டன அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரசியல் படுகொலைகளும் சகோதரப் படுகொலைகளும் இன்று நேற்று ஆரம்பமானவை அல்ல. தமிழ்மக்களின் உரிமைப் போர் கூர்மையடைய ஆரம்பித்த போதில் இருந்தே இவை நடந்து வருகின்றன.

'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் காரணமாக யாழ். குடாநாட்டைவிட்டு வெளியேறிச் சென்ற குடாநாட்டு மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது. அவ்வாறு முகங்கொடுத்து அவர்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் முடிந்த அளவுக்கு அவர்களுக்கு உதவும் திட்டத்தில் முன்னின்று உழைத்துக் கொண்டிருக்கும் அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் கொலை செய்யப்படுகிறார்கள்.

இச்சம்பவங்கள் குறித்து புளொட் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

உரிமைப் போராட்டம் என்ற பேரால் யாழ். குடாநாட்டு மக்கள் இடம்விட்டு இடம் பெயர்ந்து பிறமாவட்டங்களிலும், கடல் கடந்த நாடுகளிலும் அகதிமுகாம்களிலும் வாழ்ந்து தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என்ற நோக்கில் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வேளையில் அந்த மக்கள் மீண்டும் ஒரு நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் எனத் தோன்றுகிறது.

மக்கள் இன்று அமைதியான சுமுகமான வாழ்க்கையையே விரும்புகின்றார்கள். மண்மீட்புஎன்பது மக்களின் சுதந்திரமான, சுபீட்சமான வாழ்க்கைக்காகவே என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-9)

## திருடன் பிடிபட்டான்

நவாலி வடக்கு - புலவர் வீதியில் ஆட்கள் இல்லாத வீடுகளில் திருடிக் கொண்டிருந்த நபர் ஒருவர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

யன்னல், கதவு, ஓடுகள் திருடுவதில் ஈடுபட்ட மேற்படி நபர் நவாலி அட்டகிரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-185)

## 430குழந்தைகள் சொட்டுமருந்து பெற்றனர்

மானிப்பாய் சுகாதாரப்பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியான நவாலியில் 430க்கும்மேற்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது

மானிப்பாய் பொதுச்சுகாதாரப்பரிசோதகர்எஸ்.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற சொட்டு மருந்து வழங்கல் நிகழ்வில் தாதியரும், சுகாதாரத் தொண்டர்களும் கலந்து தொண்டனர்.

(ஐ-185)

## ரணில் அமெரிக்கா பயணம்

கொழும்பு. செப். 21

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா பயணமானார்.

மூன்று வாரங்கள் அவர் அமெரிக்காவில் தங்கியிருக்கும் காலத்தில் இங்கு ஐ. தே. கட்சியின் வேலைத் திட்டங்களை அமுல்படுத்த 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது(இ-21)

# ஜயலத் ஜெயவர்த்தனா மீண்டும் மடு செல்ல அனுமதி கோருகின்றார்

## சி. ஐ. டி. பொலீஸாரை அனுப்ப கோரிக்கை

கொழும்பு, செப். 21

ஐக்கியதேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தாம் மீண்டும் மடுவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தாம் மடுவுக்குச் செல்லும் போது சி. ஐ டி. பொலீஸாரைத் தம்முடன் அனுப்புமாறும் அவர் கேட்டுள்ளார்.

தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து மடு தேவாலயத்திற்கு தண்ணீர்த் தாங்கி ஒன்றைக்கட்டுவதற்கு ரூபா 4லட்சத்தை தாம் ஒதுக்கியுள்ளதாகவும்; அதற்கான அனுமதியை வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழு ஏற்கனவே வழங்கிவிட்டதாகவும்—

பிரஸ்தாப தண்ணீர்த் தாங்கி தொடர்பான மதிப்பீட்டுப் பணிகளை கண்காணிப்பதற்காகவே தாம் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கும் 9 ஆம் திகதிக்கும் இடையில் தாமும், சமய, சமூக நிலையத்தின் இயக்குனரான வண. ஓஸ்வார்ல்ட் பேர்த்தும் மடுவுக்குச் செல்வதற்கு அனுமதி கேட்டு ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது—

மடு தேவாலயத்தில் உள்ள அகதிமுகாமை அகதிகளுக்கான ஐ.நா. தூதுவராலயம் பராமரித்து வருகிறது.

பிரஸ்தாப முகாமில் சுமார் 30 ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளனர். இவர்களுக்கு போதிய தண்ணீர் வசதி இல்லை முன்னர் தான் அங்கு விஜயம் செய்திருந்த போது தண்ணீர் இல்லாமையால் படும் கஷ்டங்களை நேரில் கண்டேன் அவர்களின் கஷ்டத்தைப் போக்கும் நோக்குடனேயே தண்ணீர்த்தாங்கி ஒன்றைக் கட்டுவதற்கு முடிவு செய்தேன்.

இத்திட்டம் குறித்து திட்ட அமுலாக்கல் அமைச்சுக்கு அறிவித்து அவர்களின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

தண்ணீர்த் தாங்கி சம்பந்தமான மதிப்பீட்டு வேலைகளைக் கண்காணிப்பதற்காக எனது வாகனத்திலேயே செல்லவுள்ளேன். வாகனத்தை நானே செலுத்துவேன். என்னுடன் வணபிதா ஒஸ்வார்ல்ட் பேர்த்தும் கூட வருவார்.

சென்ற தடவைதான் மடுவுக்குச் சென்றது குறித்துப் பெரிதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. அந்த விஜயம் முரண்பாடான விஜயமாக எடுத்துக் காட்டப்பட்டது.

அது தொடர்பாக சி.ஐ.டி. பொலீஸார் என்னை விசாரித்தும் உள்ளனர். ஆகையால எனது விஜயம் குறித்து தங்களுக்குத் தெரியபபடுத்தும் முகமாக இரண்டு சி. ஐ. டி. பொலிஸாரை என்னுடன் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது விஜயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிப்பதோடு அதற்கான அனுமதியை வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்—

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# செய்திக் கொத்து

## பற் பரிசோதனை

சண்டிலிப்பாய், செப். 21

மானிப்பாய் பரிஷ்லயன்ஸ் கழகம் நவாலி வடக்குஅட்டகிரிசைவவித்தியாலயத்தில் பல்வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ரவீந்திரனின் உதவியுடன் அண்மையில் மாணவர்களுக்கு பற்பரிசோதனையை மேற்கொண்டுள்ளது.

(ஐ-135)

## உலவிக்குளம் திருத்தப்படும்

வலி. தென்மேற்குசெப்.21

உலக உணவு ஸ்தாபன திட்டத்தின் கீழ் நவாலி உலவிக்குளம் திருத்தப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை உடுவில் பெரும்பாக உத்தியோகத்தர் எடுத்துள்ளார்.

நவாலி உலவிக்குளத்தை விரைவில் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் பார்வையிட்டதன் பின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

இதே வேளை

நவாலி வேடுவன் கண்டி விவசாய வீதி திருத்த வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

(ஐ-185)

## பிரிவுபசாரம்

தென்மராட்சி, செப். 21

திருகோணமலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் கூட்டுறவுப் பரிசோதகர் வி.விஜயரத்தினத்திற்கு தென்மராட சிப் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் உள்ள கூட்டுறவு அமைப்புகளினால் பிரிவுபசார விழா நடத்தப்பட்டு வருகின்றன. (ஐ-117)

## வலி. வடக்கு விவசாயிகள் சிரமம்

வலி வடக்கு, செப் 21

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்கான கமநலசேவை நிலையம் சண்டிலிப்பாய், சங்குவேலிப் பகுதியில் இயங்குவதனால் வலி. வடக்கு விவசாயிகள் கஷ்டமடைகின்றார்கள்.

கடந்தகால இடப்பெயர்வைத் தொடர்ந்து இந்த நிலையமும் இடம்பெயரநேர்ந்தது. ஆனால் வலி வடக்கில் மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் உரிய திணைக்களம் மீண்டும் வலி. வடக்குக்கு இடமாற்றம் செய்யப்படாமையினால் விவசாயிகள் அசௌகரியப்படுகின்றார்கள்.

(ஐ-86)

## பழுதடைந்த பேரீச்சம்பழம்

சாவகச்சேரி, செப். 21

சாவகச்சேரி நகரில் டச்சுவீதியிலுள்ளமொத்த வியாபார நிலையமொன்றில் விற்பனை செய்யப்பட்டுவரும் பேரீச்சம் பழத்தில் புழுக்களும் வண்டுகளும் காணப்படுவதாகபொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இப் பழங்களின உள்ளே சிறு சிறு புழுக்களும, வண்டுகளும் காணப்படுகின்றன. இது தொடர்பாக சாவகச்சேரி பொதுச்சுகாதாபரிசோதகரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் பேரீச்சம் பழத்தினை வாங்கும் பொழுது நன்றாக அவதானித்து வாங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-31)

## சின்னம் சூட்டல்

வடமராட்சி, செப். 21

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியில் மாணவர் தலைவர் சின்னம் சூட்டும் வைபவம் அதிபர் வே. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்துக்கு மருதங்கேணி கோட்டபிரதிக் கல்விப்பணிப்பாளர் வி. அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி அருளானந்தம் மாணவர் தலைவருக்கு சின்னம் சூட்டினார். (ஐ-173)

## ச. ச. நிலைய அபிவிருத்திக்கு நிதி

வடமராட்சி தென் புலோலியூர் சித்தி விநாயகர் பாலர் பாடசாலை அபிவிருத்திக்கும், சித்தி விநாயகர் சனசமூக நிலைய அபிவிருத்திக்கும் என ஈ.பி.டி.பி. அமைப்பு ஒரு லட்சத்து 80. ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இந்த நிதியில் சிறுவர் பாடசாலைக்கு 20 ஆயிரம் ரூபாவும், சனசமூக நிலைய அபிவிருத்திக்கு என 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-6-36)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வலி.தென்மேற்கு,செப். 21

வடக்கு-கிழக்கு மாகாண சபைக் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் ராஜகோபால் குகன் நீளம் பாய்தலில் மூன்றாம் இடம் பெற்றமையைப் பாராட்டிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காலை 8, 30 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் கல்லூரி அதிபர் ஜி. இராஜநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் என். தற்பரானந்தன் கலந்து கொள்வார்.

(ஐ-185)

## விளையாட்டுப் போட்டி

புத்தூர் கலையகம் சனசமூக நிலையமும் வீனஸ் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம் பெற்றது.

இதில் யாழ். மாவட்ட மட்டத்தில் பதினைந்து மைல் மரதன் ஓட்டப் போட்டியில நவாலி வடக்கைச் சேர்ந்த இரு சகோதரர்கள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றனர்.

பரமானந்தம் ஜயானந்தன் முதலிடதத்தையும் பரமானந்தம் ஜயந்தன் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

(ஐ-185)

## ஆலயத்துக்கு ஒலிபெருக்கி

வடமராட்சி செப். 21

நாகர்கோவில் வடக்கு முருகன் கோவிலுக்கு ஒலி பெருக்கி சாதனமும், ஜெனரேட்டர் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன,

அவ்வூரைச் சேர்ந்த அமரர் வே. ஏரம்புவின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தினரால் இவை வழங்கப்பட்டுள்ளன.

(ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ சண்டிலிப்பாய்
இந்து மகா வித்தியாலயத்தின்
15 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணியினர், கோட்ட, வலய, உபமாகாண மட்டங்களில்
முதலாம் இடத்தைப் பெற்றமைக்கும்,
வடகிழக்கு மாகாண மட்டத்தில்
இரண்டாம் இடத்தைப் பெற்று ஆளுநர் கிண்ணத்தைச் சுவீகரித்தமைக்கும்
அகில இலங்கை ரீதியான போட்டியில்
முதலாவது சுற்றில் வெற்றி பெற்றமைக்கும்

பாடசாலைக்கும், சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்கும் பெருமை சேர்த்த அணியின் வீராங்கனைகளையும் பயிற்றுநர்களான இ. துஷ்யந்தன், செல்வி வ. சுபத்திரா ஆகியோரையும் வழிகாட்டியாக விளங்கிய அதிபர் திரு. ச. சிவநேஸ்வரன் அவர்களையும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்.
பழைய மாணவர்.

யா/சண்டிலிப்பாய் இ. ம. வி.
சண்டிலிப்பாய். (59308)

# கண்ணீர் அஞ்சலி காணிக்கை

எமது கல்வி நிறுவன தமிழாசிரியர்
திரு. சீ. வைகுந்தசாமி அவர்களின்
அன்புத் துணைவியார்
**திருமதி வை. சரஸ்வதி**
அவர்களின்
திடீர் மறைவையிட்டு ஆறாத்துயர் கொள்கின்றோம்.

இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

றூபா அக்கடமி
அரியாலை. (59321)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## இராமலிங்கம் இரத்தினசிங்கம்

மலர்வு 14 01-1925 உதிர்வு 26 09-1995

அன்பின் இலக்கணமாய் ஆதரித்த அப்பாவே!
ஊருக்கு உத்தமனாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம் குடும்பத்
தலைவனாய் உங்கள் வாழ்வை
எங்களுக்குத் தந்து எம் முயர்வுக்காக உழைத்து
நல்வாழ்வு வாழவழி காட்டிய
அன்பு அப்பாவே! நீங்கள் ஓடி மறைந்து
மூன்றாண்டுகள் சென்றாலும்
எம் மனதில் என்றும் வீற்றிருப்பீர்கள்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

R. சீலன்,
உடுவில். (59313)

# சிவில் தொண்டர் படை சார்ஜன்ட் கைது

மட்டக்களப்பு, செப். 21
மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் பணியாற்றும் எஸ். சுப்பிரமணியம் (50 வயது) என்ற சிவில் தொண்டர் படை சார்ஜண்ட் புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் இவருக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு குற்றப் புலனாய்வு பிரிவில் இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(இ-21)

வெளிவந்து விட்டது!
**அறிவுக் களஞ்சியம்**
36
எமது விற்பனையாளர்கள் உடனே தொடர்புகொள்க.
226,
காங்கேசன்துறைசாலை
யாழ்ப்பாணம். (59310)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [58755]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**பட்டப்பின் கல்வித்தகைமைக் கற்கைநெறி 1996/97**

மேற்படி கற்கைநெறிக்கான விரிவுரைகள் பின்வரும் ஒழுங்கில் ஆரம்பமாகும்.

01. முழுநேரக் கற்கைநெறி 1998-10-12 காலை 9-00 மணி.

02. பகுதிநேரக் கற்றைநெறி 1998-10-17 காலை 9-00 மணி

மேலதிக விவரங்களை தலைவர், கல்வியியல் துறையிடம் பெற்றுக் கொள்ளலாம்.

[illegible]
17-09-1998 (சி/4939)

# மின்கம்பி அபகரிப்பு

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலைக்குச் செல்லும் வீதியில் உள்ள மின்சாரக் கம்பிகள் கடந்த வாரம் திருடர்களால் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. வெட்டப்பட்ட சத்தம் கேட்டு அயலவர்கள் வீட்டிற்கு வெளியே வரவே திருடர்கள் கையில் அகப்பட்ட கம்பியுடன் ஓடித் தப்பி விட்டனர். பொதுமக்கள் கொடுத்த தகவலின் பெயரில் சில சந்தேக நபர்களை மாவடி இராணுவ முகாம் படையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

(ஐ-12)

# நீங்கா நினைவில் 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 01 – 05 – 1975



விண்ணில் 13 – 09 – 1996

செல்வன்
## பசுபதி பிரபாகரன்
திதி: 21 – 09 – 1998


ஆருயிர்க் கண்ணா! அன்புச் செல்வமே! புன்னகை
தவழும் உன் பூமுகமும் அன்புகனிந்த
அகமகிழ்வும் கம்பீர நடையழகும்
மீண்டும் பூமியில் காண்பது எப்போது ஐயா?
வற்றாத கண்ணோடு நாமிங்கு தவிக்க
எங்கு நீ சென்று மறைந்தாய் கண்ணா?

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா,
அக்காமார், அத்தான்,
தங்கை, உறவினர்கள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (59289)

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 – 01 – 1923



அமலன் அடியில் 02 – 10 – 1997

## நமசிவாயம் நடராசா

துணிவழிப் பாதையில் மனைவி நான் தவிக்க
தொட்டிலாட்டி எமைச் சுமந்த பிள்ளைகள்
எம் இதயம் ஏங்க
தங்க மாமா தயவு தொலைந்து மருமக்கள்
நாம் வாட
ஐயா ஐயா என்று பேரர்கள் கதறியழ
நீங்கள் நவராத்திரி நன்னாளில் ஐயன் கழலடி
சேர்ந்து ஓராண்டாகுதையா!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நீர்மலகிரி
கல்வயல்

ஐயனார் துணை
# மணிக்கோபுர கும்பாபிஷேகம்

ஐயனார் வழிபாடாற்றி அமரத்துவம் அடைந்த கல்வயல் ந. நடராசா அவர்களின் நினைவாக புதிதாக நிர்மாணித்த மணிக்கோபுர கும்பாபிஷேகம் 21. 9. 98 திங்கள் காலை 6 மணிக்கு இடம்பெறும்.

ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ தி. கிருஷ்ண மூர்த்திக்குருக்கள்
ஆலய தர்மகர்த்தா
சு. சிவானந்தன்

அன்றைய தினம் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும்.

மணிக்கோபுர உபயம்:-
திருமதி நடராசா குடும்பம். (59269)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்கள் விருப்பமா?

கால எல்லையின்றி நீண்டு செல்லும் போர் நிறுத்தப்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே உகந்த வழி. அதன் பொருட்டு அரசாங்கமும் தமிழீழப் புலிகளும் தமது பகைமையைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம்.

நாட்டினதும், மக்களினதும் நலன்களில் உண்மையான அக்கறையுள்ள பல தரப்பாரினதும் கருத்து இதுவாகும். தென்னிலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றும் இதனையே உறுதி செய்கிறது.

ஆனால் அரசாங்கமும். போரினால் நன்மைகள், லாபங்கள் பெறும் தரப்புகளும் மக்களின் இந்தக் கருத்தைக் கவனத்தில் எடுப்பதாக இல்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தாம் முழுமுயற்சி எடுத்து வருவதாகவே அரசாங்கத் தலைவர்கள் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அதற்கு மாறாகவே செயற்படுகிறார்கள்.

அரசு — விடுதலைப் புலிகள் பேசுவதற்கான சூழல் ஒன்று தோன்றி வருவதாக மக்கள் நம்ப வைக்கப்படுகிறார்கள். ஆனால் அது பொய், சாத்தியமற்றது என்பதனை, அரச தலைவர்கள் அடிக்கடி ஞாபகமூட்டியும் வருகிறார்கள்.

பிரிவினையும் போராட்டமும் கைவிடப்படும் என்று விடுதலைப் புலிகள் வாக்குறுதி அளித்தால் மட்டுமே அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தும் என்று சுமார் பத்து நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குருநாகலில் பேசுகையில் தெரிவித்திருந்தார்.

இத்தகைய நிலைப்பாடு பேச்சுவார்த்தை என்ற காட்சியையே நீக்கிவிடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

போர் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளை, ஒரு சாராரின் நிபந்தனையை ஏற்று அடுத்த சாரார் பேச்சுவார்த்தைக்கு இணங்குவது என்பது இரண்டாவது தரப்பினர் தோல்வி அடைந்துள்ளனர் என்ற அர்த்தத்தையே கொடுக்கும்

அத்தகைய ஒரு நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குச் செல்வர் என்று கனவிலும் நினைக்க முடியாதுள்ளது

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னரே அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குச்செல்லும். அதற்கு முன்னர் அரசு எந்தவித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடாது- என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இப்போது கூறியிருக்கிறார்.

போர்க்களத்தில் இப்படி ஒரு நிலை எப்போதாவது ஏற்படுமா என்பதில் பெரும் சந்தேகம் உண்டு. அவ்வாறிருக்க, இவ்வாறு சொல்வது போரைத் தொடர்வதிலேயே அரசு நாட்டம் கொண்டிருக்கிறது என்பதனை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

போர் நிறுத்தப்பட்டு அமைதி நிலைநாட்டப்பட்டு இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பது மக்களின் விருப்பமாக இருக்கையில்—

அரசுத் தலைவர்கள் அதற்கு மாறாகச் செயற்படுகிறார்கள்!

அரசியல் தலைவர்கள் மக்களின் விருப்பத்தை ஏற்று அதனை நிறைவேற்றச் செயற்படும் காலம் எப்போது வரும்?

# உலகத்தை சீராக இயக்கும் சக்தியே தெய்வமாக வழிபடப்படுகிறாள்

## கு. சிவபாலசுந்தரம்பிள்ளை

நாம் வாழும் இப்பூவுலகும் அதனைச் சூழ்ந்த அண்ட வெளியும் சக்திமயமானது. இவற்றின் இயக்கம் யாவும் அச் சக்தியிலேயே தங்கியுள்ளது. பல கோடி ஆண்டுகளாக இப்பூமி ஒரே சீரான வேகத்தில் தன்னைத் தானே சுற்றுவதுடன் சூரியனையும் வலம் வருகிறது. நவக்கிரகங்கள் என வர்ணிக்கப்படும் கோள்களின் செயற்பாடுகளும் இவ்வாறேயாகும்.

இந்த உண்மையை ஆதி காலத்தில் உணர்ந்த மக்கள் கண்ணுக்குப் புலப்படாத அந்த இயக்கத்தைத் தெய்வமாக மதித்து வழிபடத் தொடங்கினர். இதனைச் 'சக்தி' எனப் பெயரிட்டனர். உலகில் வாழும் உயிரினங்கள் யாவும் பெண் இனத்தின் கருவிலிருந்தே உருவாகின்றன. இதனைக் கருத்திற் கொண்டவர்கள் தாய் வடிவில் அமைந்ததாக-

**இன்று நவராத்திரி ஆரம்பம்**

பெண்ணாக சக்தியை உருவகித்தனர்.

உலகியலை உற்று நோக்கினால்தான் செயற்படுத்த நினைந்த கருமத்தை- அது சரியானதாகவோ பிழையானதாகவோ இருக்கலாம்- செய்து முடிக்கும் மனோவலிமை ஆண்களிலும் பார்க்கப் பெண்களிடம் அதிகமாக இருக்கிறது. இது அவர்



களிடம் ஊறிப்போன ஒரு உத்வேகத்தின் செயற்பாடாகும்.

இவற்றை மையமாகக் கொண்டு முன்னோர்கள் இந்த இயக்கத்தை செயற்படுத்தும் கண்களுக்குப் புலப்படாத சக்தியை பெண் வடிவில் உருவகித்து அதனைத் தெய்வமாக வழிபாடு இயற்றத் தொடங்கினர்.

சூரியன் ஓர் ஆண்டில் நிகழும் பன்னிரண்டு மாதங்களிலும் பன்னிரு இராசிகளில் சஞ்சரிக்கின்றது. புரட்டாதி மாதம் 'கன்னி' எனப்படும் இராசியில் சஞ்சரிக்கிறது. இது பெண் வடிவமானது. இம்மாதத்தில் வரும் பூர்வ பட்சத்தில் பிரதமை முதல் நவமி வரையிலான ஒன்பது தினங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சக்தி வழிபாடு இயற்றப்பட்டு வருகிறது. இதுவே நவராத்திரி என அழைக்கப்படுகிறது.

முன்னோர்கள் வீரம், கல்வி, செல்வம் ஆகியவை தமக்கு அத்தியாவசியம் என்ற வகையில் சக்தி வழிபாட்டை வேறு வேறாக உருவகித்தனர். வீரத்தை வழங்குபவளாகத் துர்க்கையையும், கல்வியை வழங்குபவளாகச் சரஸ்வதியையும், செல்பத்தை ஈட்டித் துணை புரிபவளாக இலக்குமியையும் உருவகித்து வணங்கினர். நவராத்திரிதினங்களில் முதல் மூன்று தினங்களைத் துர்க்கைக்கும், அடுத்த மூன்று தினங்களைச் இலக்குமிக்கும் கடைசி மூன்று தினங்களை சரஸ்வதிக்கும், ஒதுக்கினர்.

நவராத்திரி தினங்களை அடுத்து வரும் பத்தாவது தினம் விஜயதசமி எனப்படுகிறது. வட - இந்தியாவில் இத் தினத்தில் ஆயுதபூசை நடத்தப்படுகிறது. தாம் பயன்படுத்தும் கைத்தொழில் முதலானவற்றுக்கான ஆயுதங்களைப் பூசையில் வைத்து ஆராதனை நடத்திய பின்பு எடுத்துப் பயன்படுத்தும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. இத்தினத்தில் தொடங்கும் எக் கருமமும் தடையின்றிச் சித்தியாகும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

கல்வியில் காலடி எடுத்து வைக்கும் குழந்தைகளுக்கு விஜயதசமி தினத்தில் 'அ'கரத்தைக் கற்பித்து எழுதப் பழக்கும் வழக்கம் எம்மிடையே உண்டு. இது 'ஏடு' தொடக்குதல் என வழங்கப்படும் "வித்தியாரம்பம்" ஆகும்.

எமது நாட்டில் தொன்றுதொட்டு சக்தி வழிபாடு இயற்றப்பட்டு வருவதை அவதானிக்கமுடிகிறது. துர்க்கை, நாகபூஷணி, கண்ணகை எனப் பல பெயர்களைக் கொண்ட ஆலயங்கள் ஆங்காங்கே அமைந்துள்ளதைக் காணலாம். இதுதவிர எவ்வித வேறுபாடுகளுமின்றி சிவன், முருகன், பிள்ளையார், வைரவர் முதலான சகல ஆலயங்களிலும் இந்த நவராத்திரிவிழா நடைபெறுவது கண்கூடு.

இந்த ஆண்டு இன்று திங்கட்கிழமை ஆரம்பித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நவராத்திரி விழா நிறைவு பெறும். புதன் கிழமை விஜயதசமியாகும்.

நவராத்திரி தினங்களில் ஆசார சீலராக இருந்து, திருக்கோயில் வழிபாடியற்றி, தோத்திரங்கள், சக்தியின் நாமாவளிகளைப்பாடி சகல சௌபாக்கியங்களையும் பெற்றுய்வோமாக.

★

# கால்நடை வளர்ப்பு அபிவிருத்திக்கு துரிதமான செயல் திட்டம் தேவை

### நடந்ததும் நடவாததும்-4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட மீளக்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுத்திட்டங்கள், செயல் முறைகள் குறித்த கண்ணோட்டம் ஒன்றை, யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அண்மையில் அறிக்கை வடிவத்தில் வெளியிட்டுள்ளது

அந்த அறிக்கையில் மக்கள் நலன் — வசதி— கருதி நடந்ததும் நடைபெறாததும் குறித்துப் புள்ளிவிவரங்களுடன் விலாவாரியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரஸ்தாப கண்ணோட்ட அறிக்கை உதயனில் பகுதி பகுதியாக அவ்வப்போது வெளிவரும்.

யாழ்ப்பாண விவசாய மக்கள் மத்தியில் கால்நடை வளர்ப்பு ஒரு நீண்ட கால பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. 1995 ஒக்ரோபரில் றிவிரச மூலம் வலிகாமம் பிரதேசத்தில் இருந்து சுமார் 5,00,000 மக்களின் திடீர் இடப் பெயர்வு இத்துறையில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதிகமான மக்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு, ஆடு மாடுகளையும் விட்டு தென்மராட்சி வடமராட்சிப் பகுதிகளுக்கும் புலம் பெயர்ந்தார்கள். கால் நடைகளின் எண்ணிக்கையில் உண்டான இழப்புகள் பற்றிய மதிப்பீடு இன்னமும் செய்யப்படவில்லை. மாடு ஆடுகளில் 50 வீதமும் செம்மறி ஆடுகள், கோழிகளில் 75 வீதமும் இழக்கப்பட்டதாக அண்ணளவாகக் கொள்ளலாம். 20,000 சேவல் குஞ்சுகளை பொரிக்கக் கூடிய பொரிக்கும் சாதனம் போர்க் காலத்தில் பாதிக்கப்பட்டது.

மக்களுக்கு இறைச்சி, பால், முட்டை வழங்குவதற்காக குடாநாட்டில் கால் நடை முயற்சிகளுக்கு புத்துயிரளிக்கப்பட வேண்டும். வேலையற்றோருக்கும், வேலை குறைவாக உள்ளவர்களுக்கும் இத்துறை ஒரு நல்ல வருமானம் ஈட்டும் தொழிலாக அமையும்.

கால்நடைகளின் எண்ணிக்கை

| வகை | | 1990 | | 1996 (உத்தேச மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| கறவைப் பசு | — | 33.000 | — | 19,000 |
| மற்றைய பசு | — | 31,000 | — | 16 000 |
| எருது | — | 19.000 | — | 9.000 |
| கன்று | — | 32.000 | — | 16,000 |
| வெள்ளாடு | — | 26,000 | — | 13.000 |
| மறி | — | 42,000 | — | 21,000 |
| செம்மறி | — | 14,000 | — | 3,000 |
| மற்றைய கோழி | | | | |
| முட்டையிடும் கோழி | — | 1,83.000 | — | 40,000 |
| சேவல் | — | 3,00,000 | — | 75,000 |
| குஞ்சுகள் | | | | |

### மாடுகள்

மாடு வளர்ப்பை வளர்ச்சி அடையச் செய்வதற்கு, திட்டமிடப்பட்ட குறைந்த [illegible] கூடிய அபிவிருத்தி செயற்றிட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் ஏனெனில் சென்ற இரு ஆண்டுகளில் எதுவித மான காத்திரமான நடவடிக்கைகளும் மந்தை வளர்ப்பைப் பெருக்குவதற்கு எடுக்கப்படவில்லை.

மந்தையைப் பெருக்குதல் உள்ளூர் மந்தைகளுடன் இனங்கலப்பு செய்தல் மூலம் வர்க்க விருத்தி செய்தல் போன்ற நிலைப்பாடுகளை அபிவிருத்தித் திட்டங்கள் கொண்டிருத்தல் வேண்டும். தற்போதைய நிலையில், 3000 விருத்தியடைந்த வர்க்கமும், 10,000 உள்ளூர் வர்க்கமும் சினைப்படுத்தலுக்காக சேர்த்து கொள்ளப்படவேண்டும். உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பால் சேகரிப்பு விநியோக வசதிகள் மீது உடனடிக் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

மாட்டுத் தீவனங்களின் விலை மிகவும் உயர்ந்துள்ளது, இவைகொழும்பு விலையில் இங்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்ற இருவருடங்களில் பசுக்கள் வெளியிலிருந்து தருவிக்கப்படவில்லை என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும். விவசாயிகள் கமநல சேவை திணைக்களத்தினால் வழங்கும் சேவைகளிலேயே தங்கியுள்ளார்கள். இன்றைய சவாலை எதிர்கொள்வதற்கு இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் கணிசமான அளவு முன்னேற்றப்பட வேண்டும்.

### ஆடுகள்

ஆடுகள் பாலுக்காகவும், இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றன. இரண்டு தேவைகளுக்காகவும் தற்போதைய நிலையில் வளர்ச்சி தேவை. இந்த நிலையை வர்க்க இனவிருத்தி முன்னேற்றத்தாலும் மந்தையைப் பெருக்குவதாலும் அடையலாம்.

வர்க்க இனக் கலப்பு அபிவிருத்திக்கு இனக்கலப்பு செயற்றிட்டம் ஒன்று அவசியமாகும். இவற்றை இயற்கை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

**உதயவாக்கு**

ஆசைகள் வளர வளர தேவைகளும் வளர்ந்து கொண்டே போகும்.

—பிளேட்டோ.

**நாளை**

புரட்டாதி - 06

செவ்வாய்க்கிழமை

திதி: துதியை பின்னிரவு 1, 57 வரை:

நட்சத்திரம்: அத்தம் பிற்பகல் 01.57 வரை:

சுபநேரம்: 10.32 - 12.02

ராகுகாலம்: 03.02 04 32

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்களைத் திருத்துவதற்கு திருத்துனர் உடன் தேவை: நேரில் வரவும்; 140, பலாலி வீதி, திருநெல்வேலி; [59275]

### தவறிவிட்டது

நெடியகாடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த த. பாஸ்கரன் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் இரண்டும் (இல.) 452893266V) பருத்தித்துறையில் 17-09-98 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உரிய முகவரியில் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். [59312]

### வீடு விற்பனைக்கு

கண்டுக்குளியில் பேரின்பநாயகம் ஒழுங்கையில் (கச்சேரிக்கு அண்மையில்) அமைந்துள்ள 20 ஆம் நம்பர் இலக்கத்தைக் கொண்டுள்ள நான்கு பரப்புக்காணியும், வீடும் விற்பனைக்குண்டு: தொடர்பு: J. J. அற்புதராஜா, 25, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி. [59315]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணமாகொழும்பா 300 நாடகங்களும், நாடகம் எழுதுவது எப்படி? என்ற நூலையும் தந்த அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் ஏழாவது நாடக நூல்: 7 நாடகங்களும் 4 கட்டுரைகளும் ரூபா 50. [59226]

## ஐ. நா. அதிகாரிகள் வவுனியாவில்

வவுனியா, செப்21

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் நிகழ்வுகளில் பங்கு கொள்வதற்காகயாழ்ப்பாணம்செல்லவிருந்த ஐ.நா: அதிகாரிகள் இருவரும் தமது விஜயம் ரத்துச் செய்யப்பட்டதனையடுத்து நேற்று முன்தினம் வவுனியா வந்து சொட்டு மருந்துகொடுக்கும் நிகழ்வுகளில் பங்கு கொண்டனர்.

ரொபி வில்லியம்ஸ், இயன் டியுரி ஆகிய இரு ஐ. நா: அதிகாரிகளும் வவுனியா சென்றுஅங்குசொட்டுமருந்து வழங்கும் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்;

நேற்றுக் காலை முன்தினம் வவுனியா சுகாதாரப் பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சேதீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (இ-9-164)


**NEW BRIGHT**

J / MARTYN ROAD.

O/L
PAPER CLASS

கணிதம்:
திரு. அருள்நேசன்
விஞ்ஞானம்:
திரு. வசீகரன்
தமிழ்;
திரு. ராஜா
வர்த்தகம்:
திரு. இராஜ்கலிஸ்ரஸ்
ஆங்கிலம்:
திரு. நேசன்
சமூகக்கல்வி:
திரு:
திருச்செல்வநாதன்

ஆரம்பம்:
23 — 09 — 1998
(59327)


## வெற்றிலைக்கேணி மீனவர் பருத்தித்துறைக்கு அலைச்சல்

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறையில் இயங்கி வருவதனால் வடமராட்சி கிழக்குப்பகுதி, வெற்றிலைக்கேணி மீனவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

பருத்தித்துறையில் இடம்பெறும் சங்கக் கூட்டங்களுக்கு வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்கள் செல்ல முடியாது: இதன் காரணமாக சங்கக் கூட்டத்தையும் சங்க நிர்வாகத்தையும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் இயங்கச் செய்யுமாறு சங்க உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-6-36)

உ

மாவை கொல்லங்கலட்டி

### பிள்ளையார் கோயில் - சிவன் கோயில்

### நவராத்திரி விஞ்ஞாபனம்

இன்று தொடக்கம் நவராத்திரி விழா காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நிகழும்: பிள்ளையார் கோயிலில் ஸ்ரீமகாலட்சுமி அம்பாளுக்கும், ஸ்ரீதுர்க்காலட்சுமி சரஸ்வதி சம்மேளன பூசையும், சிவன் கோயிலில் ஸ்ரீ சிவகாம சுந்தரவல்லி அம்பாளுக்கும் வழமை போல பூசைகள் நடைபெறும்.

பக்தர்கள் வழிபட வசதிகள் செய்யப்பட்டுள்ளன;

**மானம்பூ உற்சவமும் அட்சராரம்பமும்**
புதன் 12-00 மணிக்கு முன் நடைபெறும்.

அட்சராரம்பம் செய்வோர் முன்னதாக என்னுடன் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்தில் சந்திக்கவும்;

ஸ்ரீலஸ்ரீ
சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்
அறங்காவலர்

(59328)

### கண்ணீர் அஞ்சலி

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் = 1983ஐச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தரான

### ஆறுப்பிள்ளை கணேசலிங்கம்

அவர்களின் மறைவையொட்டி எமது நிறுவன இயக்குநர் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள். தொழிலாளர்கள் சார்பான கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மனைவி, பிள்ளைகளுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983
(R. R. F. - 19B3)

374, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(59325)

### நீங்காத நினைவில் ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு: | உதிர்வு |
|---|---|
| 01 | 21 |
| — | — |
| 07 | 09 |
| — | — |
| 1978 | 1993 |

**செல்வன் குமாரகுலசிங்கம் சிவகுமாரன்**
(சிவா)

ஆண்டு ஐந்து சென்றாலும்
ஆறவில்லை எம் துயர்
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்ற எம் செல்வமே!
உந்தன் உயிர்தான் எம்மை விட்டுப்பிரிந்ததடா
ஆனால் உன் நினைவு எம் மனதுக்குள்
என்றும் நிலைத்து நிற்குதடா!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணன்,
அக்காமார், மருமக்கள்,

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(59324)

## உரப்பை உட்கொண்ட பசு நோயுற்று மரணம்

உரப்பையை உட்கொண்ட பசுமாடு ஒன்று நோயுற்று இறந்தது.

இச் சம்பவம் உரும்பிராய் வடக்கில் இடம் பெற்றது:

அந்த மாடு பல நாள்கள் நோயுற்றிருந்த போதும் அதற்கான காரணத்தைக் கால் நடை வைத்தியரால் கண்டு பிடிக்க முடியாதிருந்தது: கடும் சுகவீனமுற்று படுத்த படுக்கையான போது வைத்தியர் மாட்டுக்கு சத்திர சிகிச்சை செய்தார். அப்போது இரைப் பைக்குள்ளிருந்து உரப்பையின் பாகங்கள் மீட்டெடுக்கப்பட்டன. இச் சிகிச்சை இரண்டு மணி நேரம் நீடித்து அதிக இரத்தம் வெளியேறியதனால் மாடு இறந்து விட்டது.

உரப்பை சமிபாடு அடையாததனால் தான் இந் நோய் ஏற்பட்டதெனவும், பொலித்தீன் வகைகளை உட்கொண்டாலும் இந் நிலை ஏற்படும் எனவும் கால் நடை வைத்தியர் தெரிவித்தார். (ஐ-154)

## கால்நடை வளர்ப்பு அபிவி...

(ஏழாம் பக்கத் தொடர்)

வழி முறையிலும், செயற்கை சினைப்படுத்தல் மூலமும் அடையலாம். 5,000 ஆடுகளை ஒரு வருடத்திற்கு செயற்கை சினைப்படுத்தல் செய்வதனை இலக்காகச் செயற்பட வேண்டும்.

இயற்கை வழிகளை மீள புனரமைப்பு செய்வதற்காகவும், துரிதப்படுத்துவதற்காகவும் தெரிவு செய்யப்பட்ட ஆடு வளர்ப்போருக்கு இயற்கை முறையில் சினைப்படுத்தும் ஆடுகள் வழங்கப்படவேண்டும்.

மிகவும் உயர்ந்த நல்லின ஆடுகள் நூறு கொண்டு வருவதற்கு யு.என்.டி.பி திட்டம் ஒன்றை யு.என்.டி.பி அங்கீகரித்துள்ளது: ஆனால் இன்னும் செயற்படுத்தப்படவில்லை.

### கோழி வளர்ப்பு

1996 - 98 ஆண்டு காலப் பகுதியில் 1,50,000 ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டன. திணைக்களம் 1,10,000 கோழிக்குஞ்சுகளையும், தனியார் துறையினர் 40,000 கோழிக் குஞ்சுகளையும் கொண்டு வந்தனர். இவைகள் ஒரு குஞ்சு 38 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது: தற்போதைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 1,00,000 ஆகவும், உள்ளூர் இனம் 1,50,000 ஆகவும் உள்ளது.

50 கிலோ கிராம் கோழித்தீன் விலை 850 ரூபாவில் இருந்து 1, 200 ரூபா வரை ஏறி இறங்கிக் கொண்டு இருக்கிறது.

கோழித்தீன் கொழும்பு விலைக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.

### தேவையான நடவடிக்கைகள்

★ கால்நடை மருத்துவ சேவை 1995 இல் இருந்த நிலையிலேயே தற்பொழுதும் உள்ளது. கீழ்க் காணும் காரணங்களால் சேவைகள் முன்னேற்றம் காண முடியவில்லை.

அ: ஆளணிப்பற்றாக்குறை,
ஆ: நகரும் தன்மை போதாமை இ: செயற்கை சினைப்படுத்தும் நிலையங்களில் உள்ள வசதியீனங்கள் முதலியவை.

★ ஆளணி — 4 கால்நடை வைத்தியர்களும் - 13 கால் நடை அபிவிருத்தி பயிற்சியாளர்களும் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

★ நகரும் தன்மை — பெரும்பாக நிலையங்களில் போக்குவரத்துக்கான வாகனங்கள் இல்லை. இதனை நிவர்த்தி செய்வதற்கு 11 பிக்கப் வாகனங்கள் மற்றும் 11 மோட்டார் சைக்கிள்களும் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

★ செயற்கை சினைப்படுத்தும் நிலையத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உயர்ந்த நல்லின காளை மாடுகளோ அல்லது உயர்ந்த ஆட்டுக் கடாக்களோ இல்லை. மொத்தம் 50, 000 பசுக்களில் 500 பசுக்களுக்கே செயற்கைச் சினைப்படுத்தல் செய்யப்படுகிறது.

பிரதான நோக்கத்தை அடையும் பொருட்டு உயர் இன மாடுகளும், ஆடுகளும் நிலையத்திற்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும். தற்போதைய சேவையை வருடம் 10, 000 பசுக்களும் 5, 000 ஆடுகளும் என்று விஸ்தரிக்கக் கூடியதாக வசதிகள் செய்யப்பட வேண்டும்.

★ குஞ்சு பொரிக்கும் பண்ணை அச்சுவேலியில் தாமதமின்றி அமைக்கப்பட வேண்டும்.

★ மாட்டுத் தீவனமும் கோழித் தீவனமும் உற்பத்தி செய்யப்படவில்லை. தற்போதைய தேவையின் மூன்றில் ஒருபங்கு கால்நடை உணவையேனும் உற்பத்தி செய்யக்கூடிய ஆலைஅமைக்கப்படல் வேண்டும்.

★ நல்ல நிலையில் தரமான பால் வாங்கவும் விற்கவும் முனைப்பான தேவையான வசதிகளுடன் பால் சேகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட வேண்டும்.

★ பசுக்களும், மறியாடுகளும் வெட்டப்படுவது தடை செய்யப்பட வேண்டும்.

★ கண்ணி வெடிகளால் பெருந்தொகையான கால் நடைகள், தங்கள் கால்களை இழந்து உள்ளன. கண்ணிவெடி அகற்றும் திட்டம் மேலும் தாமதமின்றி செயற்படுத்தப்பட வேண்டும்.

★ கால்நடை, கோழித்தீவனங்களை கொழும்பு விலையில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்,

★ பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கலும், இத்துறையை துரிதமாக முன்னேற்றுவதற்காக ஒரு மானிய முறையை அறிமுகப்படுத்தலும் மிக அவசியமானதாகும். தகுதி அடிப்படையில் தகுதியான விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கு கடன் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

### வழங்கப்பட்ட உதவிகள்

★ 1996 இலும் 1997 இலும் கால்நடை அபிவிருத்திக்கான சிறிய திட்டங்களுக்காகவும், சுழற்சி முறை கடன் திட்டத்திற்காகவும் யு. என். எச். சி. ஆர். 17 லட்சம் ரூபா செலவு செய்துள்ளது.

★ கோழிக்குஞ்சுகள் பொரிக்கும் சாதனகட்டடங்களுக்காக திணைக்களத்தினால் செய்யப்பட்ட செலவு 13 லட்சம் ரூபா ஆகும்.

★ பிராந்திய பணிமனைக்கு யு. என். எச். சி. ஆர். எட்டு சூரிய ஒளி இயக்க குளிர்சாதனப் பெட்டிகளை வழங்கியது.

★ யு. என். டி. பி. யினால் கொண்டு வரப்பட்ட 190 வீட்டுக்குரிய குஞ்சு பொரிக்கும் சாதனங்கள் பயன்படுத்தாமல் இருப்பதாக நாங்கள் அறியக் கூடியதாக உள்ளது. இவற்றை கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கலாம்.

தேவைகளுடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட உதவிகள் மிகவும் சொற்பமானவைகளே. ஆகவே வளங்களை ஒன்று சேர்த்து ஒரு துரிதமான செயற்திட்டத்தை அமுலாக்க காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிருப்தியுற்று ஓய்வுபெற்ற

# 15 ஆயிரம் பொலீஸாருக்கு மீண்டும் வேலைவாய்ப்பு!

கொழும்பு, செப். 21

பொலீஸ் சேவையிலிருந்து அதிருப்தியுற்று கடந்த ஒன்றரை வருட காலத்திற்கு முன்னர் ஓய்வுபெற்ற சுமார் பதினையாயிரம் பொலீஸ் உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்வதென பொலீஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் தாபனக் கோவை இலக்கம் 44/90 இன் படி இருபது வருட சேவையைப் பூர்த்தி செய்த அரச ஊழியர்கள் ஓய்வுபெற அளிக்கப்பட்டிருந்த சலுகையைப் பயன்படுத்தி பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட பொலீஸார் திடீரென ஓய்வு பெற்றனர்.

பதவி உயர்வு இன்மை, அரசியல் பழிவாங்கல், திறமையாளருக்கு உரிய இடம் கொடுக்கப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையிலேயே இவர்கள் அதிருப்தியுற்று பொலீஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதாகத் தெரியவருகின்றது.

திறமையான பொலீஸ் அதிகாரிகள் சேவையை விட்டு விலகிச்சென்றதனால் பொலீஸ் நடவடிக்கைகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

புதிதாகப்பதவியேற்றுள்ள பொலீஸ் மா அதிபர் லக்கி கொடிதுவக்குவின் கவனத்திற்கு கடந்த காலத்தில் பொலீஸ் திணைக்களத்தின் நிர்வாக தவறுகள், பதவி உயர்வுகளின்போது காட்டப்பட்ட பாரபட்சம் போன்ற விவரங்கள் கொண்டுவரப்பட்டதுடன், தற்போது நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதைத் தடுக்க பொலீஸ் திணைக்களத்தை விட்டு வெளியேறிய திறமையான அதிகாரிகளை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளவேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. இதனையடுத்து பொலீஸ் திணைக்களத்தில் இருந்து ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரிகளை சேவையில் சேர்த்துக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள சகல பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கும் தற்போதைய விவரங்களைக் கோரும் படிவங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

(ஐ-10)

## முகாமைத்துவ டிப்புளோமா பரீட்சை

வலி தென்மேற்கு செப். 21

யாழ். திறந்த பல்கலைக் கழக 1999-2001 கல்வி ஆண்டில் "முகாமைத்துவ டிப்புளோமா" கற்கை நெறிக்கான பரீட்சையில் 225 பேர் தோற்றியுள்ளனர் என்று பிராந்திய இயக்குநர் சி. ஆர். ஞானேந்திரன் தெரிவித்தார்.

பல ஆண்டுகள் இடைவெளிகளின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கே மாணவர்கள் அதிகளவில் பதிவு செய்ததாகவும் அவர் கூறினார்.

(இ-185)

## கஸ்தூரியார் வீதி திருத்தப்படுகிறது

யாழ்ப்பாணம் செப். 21

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது

(இ-139)

## மீளக்குடியேறிய பகுதிக் கிணறுகளுக்கு

# 2 ஆம் கட்டமாக குளோரின் இட 7 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப். 21

இடம்பெயர்வின் பின்னர் மீளக்குடியேறிய பகுதிகளில் 7 பிரதேச சபைகளுக்குட்பட்ட கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் 7 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை இரண்டாம் கட்ட நிதியாக வழங்கியுள்ளது.

வலி. வடக்கு, வலி. தெற்கு, வலி கிழக்கு, வலி. மேற்கு ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளுக்குட்பட்ட குடிதண்ணீர்க் கிணறுகளுக்கே குளோரின் இடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இப் பணியின் முதற்கட்ட வேலைகள் வெற்றிகரமாக இடம் பெற்றதைத் தொடர்ந்து 2 ஆம் கட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது.

(ஐ 6)

## எழுதுநருக்கு கணக்கியல் பற்றி கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் கணக்கு எழுதுநர்களுக்குக் கணக்கியல் தொடர்பான கணனிப் பயிற்சி எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பிலுள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பயிற்சி நெறிக்கு 19 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளையும், எதிர்வரும் வியாழக்கிழமையும் பிற்பகல் மூன்று மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அபிவிருத்தி கணக்கியல் நிறுவனத்தில் நிறுவன இணைப்பாளர் நா. இராசநாயகத்திடம் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தைச் சேர்ந்த திருமதி மு. சுலோசனா, க. நடராசா, என். செல்வராசா, செ. சுதாகர் ஆகியோரும் —

கரவெட்டிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மாணிக்கதாசன், செல்வி ரி. செல்லப்பாக்கியம் ஆகியோரும் —

யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. மகேஸ்வரன், திருமதி எஸ். யோகராசா, திருமதி எஸ். சுகந்தினி ஆகியோரும் —

சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அ. பரமசாமி, பி. சுதன் ஆகியோரும் —

நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி எஸ். திருச்செல்வம், திருமதி ஆர். குலேந்திரன் ஆகியோரும் —

கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அ. தம்பிராசாவும் —

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். கந்தசாமி, எல். ஆர். ஜெயராணி ஆகியோரும் —

உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ. எஸ். பஞ்சரத்தினமும் —

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செல்வி என். கந்தையா, பாலகிருஷ்ணபிள்ளை, ஆகியோரும் — பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(இ-3-51)

## கூரையில் இருந்து வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், செப். 21

வீடொன்றின் மேலிருந்து கூரை வேலை செய்துகொண்டிருந்தவேளை தவறிவிழுந்து ஒருவர் காயமடைந்தார்.

சங்கானையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த கந்தையா சிவகுமார் (வயது 23) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். இவர் சங்கானை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(ஐ-15)

## 27 பேருக்கு கண் பாதிப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த வாரம் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட மருத்துவ சிகிச்சை முகாமில் கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களில் 27 மாணவர்களுக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

178 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டதாகவும் இவர்களில் 40 வீதமானோருக்குக் கண்களில் கோளாறு ஏற்பட்டிருந்ததாகவும் லயன்ஸ் கழக கண் பார்வை பிரிவு தலைவர் லயன் செ. கா. நவரத்தினம் தெரிவித்தார்.

(ஐ-117)

## லயன்ஸ் கழக புற்றுநோய் கொடி தினம்

யாழ்ப்பாணம், செப். 21

லயன்ஸ் மாவட்டம் 306 பி பிராந்தியம் 8 இன் புற்றுநோய்க் கொடி தினமாக ஒக்டோபர் 8 ஆம் திகதியைப் பிரகடனப்படுத்த வேண்டும்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் செ. துரைராஜா தலைமையில் நடைபெற்றபோது இம் முடிவு எடுக்கப்பட்டது.

பார்வைக்கு முதலிடம் கொடுத்து புதிய செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தல் கழகங்களின் நிதி சேகரிப்பு சம்பந்தமான திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சுகாதார, சமூக மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தல் முதலியவற்றை நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

(இ-8)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், செப். 21

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆதரவில் வளர்ச்சியடைந்துவரும் மாணவர், சிறுவர் கழகங்களின் ஆற்றலை விருத்தி செய்வதற்கான பயிற்சிப் பட்டறை கடந்த மாதம் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் சிறுவர் பாதுகாப்பு நிதிய பயிற்சி மண்டபத்தில் இடம் பெற்றது.

மேற்படி கழக அங்கத்தவர்களுக்கான பயிற்சியினை வட பிராந்திய செபே (சீ. ஓ. எவ். ஈ) பயிற்றுனர் சங்கம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆதரவுடன் நடத்தியது.

(இ-8)

## வாசகர் திருமுகம்

### யாழ். பல்கலைக்கழகம் நடத்த வேண்டிய வேட்டை!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இவ்வாண்டுக்கான பொதுப் பட்டமளிப்பு விழாவின் போது, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவரும், துர்க்காபுரம் மகளிர் இல்ல ஸ்தாபகரும், சிறந்த சமயச் சொற்பொழிவாளரும், தமிழ்ப் பேரறிஞரும், பிரபல சமூகத் தொண்டருமான பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு கௌரவ கலாநிதிப் பட்டமளிக்க முடிவு செய்யப்பட்டிருப்பது கண்டு இறும்பூதெய்தாத தமிழ் நெஞ்சங்கள் இருக்கமுடியாது.

அவருக்கு இவ்வாறான கௌரவப் பட்டம் வழங்கப்பட வேண்டுமென்று பல வருடங்களாக பல்வேறு துறைசார்ந்த ஸ்தாபனங்கள் மூலமாகவும், தனிப்பட்ட முறையிலும் கோரிக்கைகள் விடப்பட்டு வந்த போதும் அது இப்போது தான் ஏற்கப்பட்டுள்ளது. தூய அன்னையாம் துர்க்கா துரந்தரியின் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சமுமே பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகளுக்கு விடயதானங்களை அள்ளி வழங்கத்தக்கன. தன் வாழ்வை சமய, தமிழ் தொண்டுக்காக முற்றுமுழுதாகவே அர்ப்பணம் செய்து எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மையாருக்கு அவர் வாழும் போதே பல்கலைக்கழகத்தால் "மதிப்பு" அளிக்கப்படுமா? என்பதில் பல வருடங்களாகச் சந்தேகம் நிலவியது.

நல்ல வேளையாக, காலம் கடந்தாயினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எமது சிவத்தமிழ்ச் செல்விக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்குவது மூலம் தனக்கு கிடைக்கவிருந்த அவப்பெயரிலிருந்து தப்பிப்பிழைத்துக் கொண்டது. அறிஞர் பெருமக்கள், தொண்டர்கள் யாவரும் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும். அவர்கள் சடலமான பின்பு கௌரவம் வழங்குவதில் எதுவித பயனுமில்லை.

வெளிப்படையாக அறிஞர்கள் என்று பெயரீட்டிக் கொண்டவர்களோடு, சமூக மத்தியிலே வெளித்தோன்றாமல் இலைமறை காயாக எத்தனையோ பெருந்தகைகள் வாழ்ந்துகொண்டிருக்கலாம். தம்மை விளம்பரப்படுத்திப் பெயர்பெற விரும்பாத அந்த அறிஞர்பெருமக்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கௌரவம் வழங்க வேண்டியதும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பணியாகும். இந்தத் "தேடுதல் வேட்டை" நடத்த ஒரு "படைப் பிரிவை" பல்கலைக்கழகம் நியமித்து உடன் செயலில் இறங்க வேண்டும். மக்கள் மத்தியில் வாழும் பெருந்தகைகளைக் கௌரவிப்பது; பல்கலைக் கழகத்தின் மதிப்பை மேலும் உயர்த்தும்.

மாணவர்களுக்கும், பல்கலைக்கழகம் சார்ந்தவர்களுக்கும் மட்டுமே பட்டமும் மதிப்பும் வழங்குவது சாரமற்ற பட்டமளிப்பு விழாவாகவே இருக்கும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இதை உணர்ந்து செயற்படும் என நம்புகின்றோம்.

சா. சக்திதாசன்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

### யாழ். மாணவர் கல்வி

நீண்ட காலமாக யாழ். மாணவர் கல்வி நிலை பற்றி பலர் பேசியும் எழுதியும் வருகிறார்கள். ஆனால் எந்த மாற்றமும் ஏற்படாதது மிகுந்த வேதனைக்குரியது.

நடைபெற்று முடிந்துள்ள ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சையிலும் பெறுபேறுகள் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ஏமாற்றம் தருவதாக, வினாத்தாள் திருத்துவதற்கு சென்று வந்துள்ள பல ஆசிரியர்கள் கருத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படியான கல்விச் சூழ்நிலையில் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையும், மற்றைய வகுப்புக்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சையும் நடைபெறும் 3 ஆம் தவணைக் காலத்தில் பாடசாலைகளில் பொருள்காட்சியும் இதர நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்படுவது சரிதானா? என சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்கவேண்டும்.

பொருட்காட்சி உட்பட பாடசாலை நிகழ்வுகள் அனைத்தும் அவசியமானவை என்பதை நான் நிராகரிக்கவில்லை. 3 ஆம் தவணையில் மாணவர்கள் தமது பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்கு எந்தவித இடையூறும் இல்லாமல் இந்நிகழ்வுகளை 1 ஆம், 2 ஆம் தவணைக் காலங்களில் நிகழ்த்துவது நல்லது.

சம்பந்தப்பட்டவர்கள் எனது கருத்தை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரா. செல்வவடிவேல்

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுத்துறை முதல் சுண்டிக்குளம் வரை மக்கள் குடியமர்வதற்கு அனுமதிக்குக

## பிரதேச சபையில் தீர்மானம்

செம்பியன்பற்று, செப் 21

பருத்தித்துறைப் பிரதேச சபைக்குட்பட்ட கிழக்குப் பிரதேசத்தில் உடுத்துறை முதல் சுண்டிக்குளம் வரையான பகுதிவரை மக்களை மீளக்குடியேற அனுமதிக்க வேண்டும்.

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட இப்பிரேரணை ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது இப்பகுதியிலுள்ள உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, மூள்ளியான் பகுதிகளில் மக்களை விரைவில் மீளக்குடியமர்த்தும் நோக்குடன் பருத்தித்துறைப் பிரதேசசபை இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மாமுனை, செம்பியன்பற்று, நாகர்கோவில் பகுதிகளில் தற்காலிக கொட்டகைகளில் வசித்து வந்தனர். இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இவர்களில் அனேகமானோர் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர். மீள இப்பகுதிகளுக்கு வந்த மக்கள் இருப்பிட வசதியின்றி அவதிப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டோர் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டதையடுத்து அவர்களை விரைவில் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஐ-36)

# வவுனியா - ஓமந்தை ரயில் பாதை புனரமைப்பு

வவுனியா, செப். 21

கடந்த கால வன்செயல்கள் காரணமாகச் சேதமடைந்த வவுனியா – ஓமந்தை ரயில் பாதையைப் புனரமைக்கும் பணி பூர்த்தி அடைந்து விட்டதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்சமயம் ஓமந்தை ரயில் நிலையத்தை புனரமைக்கும் பணி நடைபெறுவதாகவும் – அது முடிவடைந்த பின்னர் ஓமந்தை வரை ரயில் சேவை நடைபெறும் என்றும் – தெரிவிக்கப்பட்டது.

ஓமந்தையில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-3-164)

# வலயக்கல்வி நிர்வாக முறைகுறித்து இறுதி முடிவு

## நாளை திருமலையில் மாநாடு

திருகோணமலை, செப். 21

வடக்கு – கிழக்கில் வலயக் கல்வி நிர்வாக முறையை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப் படுத்துவது தொடர்பான இறுதி முடிவை எடுக்க விசேட மாநாடு ஒன்று நாளை திருகோணமலையில் நடைபெறவிருக்கின்றது.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, கல்முனை ஆகிய பகுதிகளில் இந்த திட்டத்தை அமுல் செய்வதில் உள்ள பிரச்சினைகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படும்.

வடக்கு – கிழக்கில் உள்ள சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களும் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(இ-3)

# மூளாயில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பனம் தோட்டம் அமைப்பு

மூளாய், செப். 21

மூளாயில் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பனம் தோட்டம் உருவாக்கப்படவுள்ளது.

வன்செயல் காரணமாக அழிவடைந்து செல்லும் பனை வளத்தைப் பாதுகாக்கும் முகமாக இப்புதிய பனம் தோட்டம் உருவாக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் மற்றும் பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் உதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இப்புதிய பனந்தோப்பு அமையவிருக்கும் இடம் மூளாய் கடற்கரை வீதியில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் இத் திட்டத்துக்கான அடுத்த கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் பனை அபிவிருத்திச் சபை அதிகாரிகள் மூளாய் கிராம உத்தியோகத்தருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-99)

## விருத்தப்பா ஓதல்

அச்சுவேலி, செப். 21

கல்வி வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளில் சகலகலாவல்லி மாலை விருத்தப்பா ஓதல் போட்டி நடைபெறவுள்ளது.

நவராத்திரி விழாவை முன்னிட்டு நடைபெறும் சகலகலாவல்லிமாலைவிருத்தப்பா ஓதல் போட்டிகள் பாடசாலை மட்டம் கோட்ட மட்டம், வலய மட்டம் என 3 பிரிவுகளாக நடைபெறும்.

(ஐ-11)

## கால் நடைகளை கட்டிவளர்க்க கோரிக்கை

செம்பியன்பற்று, செப். 21

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

குடத்தனை, மாமுனை, அம்பன் பகுதி கமக்கார அமைப்புக்கள் கால் நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கோரி உள்ளன.

(இ-36)

## வீதி புனரமைப்பு

சண்டிலிப்பாய், செப். 21

சித்தன்கேணி சந்தியிலிருந்து பண்டத்தரிப்புக்குச் செல்லும் பிரதான வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இந்த வீதி திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாகப் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமான நிலையில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

## மோட்டார் சைக்கிளின் பற்றறி திருட்டு

சுதுமலை, செப். 21

வீட்டு விறாந்தையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து அதன் பற்றறி பகல் வேளையில் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மானிப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வெளியில் சென்றிருந்த உரிமையாளர் திரும்பி வந்து மோட்டார் சைக்கிளை விறாந்தையில் நிறுத்திவிட்டு உள்ளே சென்றதாகவும்—

சற்று நேரத்தில் அவர் திரும்பி வந்து மோட்டார் சைக்கிளைப் பார்த்தபோது அதிலிருந்த பற்றறி கழற்றி எடுக்கப்பட்டிருந்ததாகவும் – தெரிவிக்கப்படுகின்றது.

(இ-9-139)

# தடுத்து வைக்கப்பட்டது செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் அம்புலன்ஸ் அல்ல

யாழ்ப்பாணம், செப். 21

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குத் தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல முற்பட்டதாகத் தெரிவித்து வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அம்புலன்ஸ் –

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் அம்புலன்ஸ் அல்ல என்றும்—

அந்த அம்புலன்ஸுக்கும் தமது அமைப்புக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும்-

வவுனியாவிலிருந்து தமது அமைப்பு நோயாளர் அம்புலன்ஸ் சேவை எதனையும் நடத்துவதில்லை என்றும்—

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாண அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய உதயன் முதலாம் பக்கத்தில் வெளியான "செஞ்சிலுவை அம்புலன்ஸ் தடுத்து வைக்கப்பட்டது" என்ற செய்தி குறித்தே அவ்வட்டாரங்கள் மேற்கண்டவாறு விளக்கம் அளித்தன. சம்பந்தப்பட்ட அம்புலன்ஸ் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினுடையதாகும்.

தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

# யாழ். பல்கலைக்கழக மாணவர் இரத்ததானம்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் இரத்தம் வழங்கும் நிகழ்வு ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ். ஆஸ்பத்திரியின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி சிவசங்கர் திருமகள் தலைமையிலான குழு ஒன்று யாழ். பல்கலைக்கழகம் சென்று அங்கு மாணவர்களிடம் இருந்து இரத்தம் சேகரிக்கும் கடமையில் ஈடுபட்டது.

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக விடுக்கப்பட்ட அறிக்கையினை அடுத்தே பல்கலைக்கழக மாணவர்கள் இரத்தம் வழங்க முன்வந்தனர் என்றும் —

வேறு நபர்கள் எவராவது இரத்தம் வழங்க முன்வந்தால் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் —

இரத்தவங்கிப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(இ-9-139)

## போராட்டம் நடத்த அம்பாறையில் முஸ்தீபு

அக்கரைப்பற்றில் ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை வினாத்தாள் வெளியான விவகாரம் குறித்து நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து அம்பாறை மாவட்டத்தில் பெரும் போராட்டம் ஒன்றை நடத்த முஸ்தீபு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பாக அரசின் பதில் கிடைக்காத பட்சத்தில் அம்பாறை மாவட்டத்தில் கரிநாள் அனுஷ்டிக்கவும் —

பெரும் போராட்டத்தை மேற்கொண்டு நிர்வாகத்தை ஸ்தம்பிக்கவும்—நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் — கல்முனை கல்வித் திணைக்கள ஊழியர்கள் இன்று பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவிருக்கின்றனர்.

(இ-3)

## உதவி மேயரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

இது தொடர்பாக தற்சமயம் கொழும்பில் ஆராய்ந்து வருவதாகவும் — கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில்—

'யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை திரும்பும் வரை யாழ். மாநகர சபை நிர்வாகத்தை ஏற்பதை கூட்டணி இடைநிறுத்தி வைப்பது குறித்து கொழும்பில் தற்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. எனினும் இது குறித்து இறுதிமுடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

தொடர்ந்து இழப்புக்களைச் சந்திப்பதற்குக் கட்சி தயாராக இல்லை' என்று தெரிவித்துள்ளார்.

அதேசமயம் — தமிழர்விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப-தலைவர் வீ. ஆனந்தசங்கரி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தமக்கு எதிராகப் பத்திரிகைகளில் வெளிவரும் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார்.

"புதியமேயர் நியமனத்தை பொறுத்தவரையில் கூட்டணி தலைவரும், செயலாளரும் வெளிநாட்டிலிருந்து திரும்பிய பின்பே பரிசீலிப்போம். அதுவரை ஏனைய ஸ்தாபனங்களைப்போல் மேயரின் கடமையை உதவி மேயர் செய்வார்; இது வழமையும் ஆகும்.

"கொழும்பு மாநகரமேயர் பதவி காலியாக இருந்த போது உதவி மேயரே இரண்டு ஆண்டுகளுக்கு மேல் மேயரின் பணிகளைச் செய்தார். அப்படி இருக்க நாம் மட்டும் விரைவாக மேயரைத் தெரிவு செய்ய வேண்டிய அவசிய காரணம் எதுவும் எமக்குத் தெரியவில்லை".

—இப்படி அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

இயல்பு நிலை திரும்பும் வரை உதவி மேயர் கொழும்பில் இருந்து செயற்படும் சாத்தியம் குறித்து ஆராயப்படுவதாக நீலன் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

(இ-3)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்)

லைத்தீவுக் கடலில் விடுதலைப் புலிகளின் மூன்று படகுகளை அவதானித்து அவற்றின் மீது தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

சேதவிவரம் தெரியவரவில்லை.

(இ-9)

## நுணாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

புலிகள் மீது படையினர் தாக்குதல் நடத்திய போது புலிகள் சிறிய ஆயுதங்களைக் கொண்டு பதில் தாக்குதல் நடத்தியதாகவும் —அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆகும் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலி அமைப்பு வேலைகளை அரசாங்க பொறியியல்கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவிருக்கிறது.

(இ-3-9)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்ற சகலரும் கண்காணிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ஜோன் எவ் கென்னடி விமான நிலையத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சென்றடைந்ததும் அங்கு ஐ. நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர், முன்னரே நியூயோர்க் சென்றிருந்த லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் வரவேற்றனர்.

ஐ. நா. கூட்டத் தொடரில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, ஈரான் ஜனாதிபதி மொஹமட் கடாபி ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

(இ-3-10-9)

## இரு சடலங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அதன் பின் படையினர் அப்பகுதியில் தேடுதல் நடத்தினர்.

"அச்சமயம் விடுதலைப் புலி உறுப்பினர்களின் இரு சடலங்களையும், ரி.56 ரக துப்பாக்கி ஒன்றையும், இரு கிரனேட்டுக்களையும், இரு மகஸின்களையும், 59 7.62 தோட்டாக்களையும், 200 விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகளையும் கைப்பற்றினர். இது தொடர்பான விசாரணை தொடர்கிறது."— இப்படி அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible]னையில் 21-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org